இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 145 | இதழ் : 10 | திகதி : 25.07.2021 | விலை : 30.00

## தாத்தாக்கள் பாட்டிகள் உலக நாளுக்கு நிறைபேறு பலன்கள்

### – திருத்தந்தை அறிவிப்பு –

இவ்வாண்டு ஜூலை மாதத்தில், முதன் முறையாகச் சிறப்பிக்கப்படும், தாத்தாக்கள் பாட்டிகள் மற்றும், வயது முதிர்ந்தோர் உலக நாளை முன்னிட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அனைவருக்கும், நிறைபேறு பலன்களை வழங்குவதாகக் கூறியுள்ளார்.

இவ்வாண்டு ஜூலை 25ம் தேதி சிறப்பிக்கப்படும் இந்த உலக நாளன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலில் தலைமையேற்று நிறைவேற்றும் திருப்பலியில், அல்லது, உலகெங்கும் இந்நாளில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில், தகுந்த ஆன்மீகத் தயாரிப்போடு கலந்துகொள்ளும் அனைவரும் ☞ 11



## கிளாலி யாகப்பர் ஆலயம் திறந்து வைப்பு



எழுதுமட்டுவாள் கிளாலி பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த புனித யாகப்பர் ஆலயம் 16.07.2021 வெள்ளிக்கிழமை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்துத் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் புனித யாகப்பர் ஆலயத்திருவிழாவிற்கு ஆயத்தமாக புனிதரின் கொடி ஆயர் அவர்களினால் ஏற்றப்பட்டது. தொடர்ந்து அழகிய தோற்றத்துடன் அமைக்கப்பட்ட புனிதரின் புதிய ஆலயம் ஆசீர்வதிக்கப்பட்டு ஆயர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து ஆலயத்தின் வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கிய 'கிளாலி மகிமையின் சுவடு' என்கின்ற நினைவு மலரும் 'சந்தியோகு அம்மானை' நூலும் அத்துடன் இணைந்த அம்மானைப் பாடல் இறுவெட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டன. இப்புதிய ஆலயத்திற்கான அடிக்கல் 2016 ஆம் ஆண்டு இதே தினத்தில் முன்நாள் பங்குத்தந்தை அருட்திரு.X.W. ஜேம்ஸ் அடிகளால் நாட்டப்பட்டது. இவ்விடத்தில் அமைந்திருந்த யாகப்பர் ஆலயம் 410 வருடங்கள் பழமைவாய்ந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வுகள் அனைத்தும் மிருசுவில் பங்குத்தந்தை அருட்திரு ப.இருதயதாஸ் அடிகளின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

## மறை ஆசிரியர் தேசியத் தேர்வு பரீட்சை திகதியில் மாற்றம்

மறை ஆசிரியர்களுக்கான தேசியத் தேர்வு I,II,III செப்ரெம்பர் 23ம் திகதி என ஏற்கனவே அறிவித்திருந்த போதிலும் அப் பரீட்சையானது ஒக்டோபர் 23ம் திகதியே நடைபெறுமென தேசிய மறைக்கல்வி நிலைய இயக்குநர் அறிவித்துள்ளார். இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் பங்குத்தந்தையர்கள் ஊடாக யாழ். மறைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஆகஸ்ட் 2ம் திகதிக்கு முன்னர் மீண்டும் யாழ். மறைக்கல்வி நிலைய இயக்குநரிடம் ஒப்படைக்கவும். இப்பரீட்சைக்கான கைநூல்களை யாழ். மறைக் கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## திருவிவிலிய அறிவுத் தேர்வு

திருவிவிலிய அறிவுத் தேர்வு இவ்வருடம் வழமைபோல் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பெறும். பாடத்திட்டத்தை உள்ளடக்கியதான வினாவிடைகள் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் உள்ளன. அவற்றைப் பெற்று பங்குத் தந்தையர்களும் மறை ஆசிரியர்களும் மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தவும்.

## மறை ஆசிரியர் இறுதித் தேர்வு ஆய்வுக்கட்டுரை

2020இல் மறை ஆசிரியர் இறுதித் தேர்வில் சித்தியடைந்த பரீட்சாத்திகள் ஆய்வுக் கட்டுரையினை சமர்ப்பிக்கும் முறையியலை அறிந்து கொள்ள விரும்பின் யாழ். மறைமாவட்டத் தொலைக்காட்சியான "மறை அலை" தொலைக்காட்சியில் வழங்கப்பட்டுள்ள கருத்துரையைப் பார்வையிட்டுத் தெரிந்து கொள்ளலாம் என யாழ். மறை மாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்பணி X.W.ஜேம்ஸ் அடிகளார் பாதுகாவலனுக்குத் தெரிவித்தார்.

## செபமாலைத் தாசர் சபையின் இலங்கை மாகாண புதிய நிர்வாகம்



செபமாலைத்தாசர் துறவு சபையின் புதிய இலங்கை மாகாண ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பெங்களூரு மாநகரில் செபமாலைத்தாசர் சபையின் உயர் பீடம் அமைந்துள்ளது. அங்கு இத்துறவு சபையின் உயர் தலைவரினதும் அவரது ஆலோசகர்களினதும் ஆலோசனைக்கூட்டம் ஜூன் மாதம் 25ம் திகதி நடைபெற்றது. ஒவ்வொரு மூன்று ஆண்டுகளின் பின்பும் புதிய மாகாணத்தலைவர் அவரின் ஆலோசகர்கள் அந்த மாகாணத் துறவு உறுப்பினர்களின் விருப்பத்தையும் கேட்டறிந்து உயர் தலைவரின் கூட்டத்தில் நியமிக்கப்படுகிறார்கள். ☞ 11

## குருத்துவத்தில் மணிவிழா

இரும்பைக் காய்ச்சி உருக்கியதோ
கல்லைச் செதுக்கி உயிர் கொடுத்ததோ
திரு அவையே அண்ணாந்து பார்க்க
குருத்துவத்தில் மணிவிழாக் காணும்
அருட்பணி லூயிஸ் பொன்னையா
திருப்பணி வாழ்வால் வழியால்
குருத்துவமே வைரித்தது - இனி
எம்மை யார் அசைக்க முடியும் ?
அமல மரியின் அருந்தவப் புதல்வன்
மாகாண முதல்வராய் இருமுறை அமர்ந்தோன்
விரிவுரையால் மெய்யியலை மெய்ப்பிப்போன்
மறையுரையால் மனங்களை அதிரவைத்தோன்
மேற்கில் சூரியன் மறைய மறுத்தாலும்
அடிகளாரின் துவிச்சக்கர வண்டி
மாலைப்பொழுதில் சுற்ற மறுக்காது
பலமே நலமான பன்முக ஆளுமை
வைரமாய் நூற்றாண்டாய்
படைத்தவன் பணி செய்ய
அருள்வேண்டி வாழ்த்துகின்றோம்



அருட்பணி லூயிஸ் பொன்னையா

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## நான் தேர்ந்து கொண்ட ஊழியன் நீயே!

**சுதேச குருக்கள்/ துறவியர் தினம் யூலை 25**

சுதேச குருக்கள் / துறவியர் தினம் யூலை 25ம் திகதி கொண்டாடப்படுகிறது. நான் தேர்ந்து கொண்ட ஊழியன் நீயே என்னும் கருப்பொருளோடு நினைவு கூர்ந்து கொண்டாடும் சுதேச குருக்கள் துறவியர் தினமானது மிகவும் அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும்.

திருப்பணியாளர்களின் வாழ்வும் பணியும் என்னும் 2ம் வத்திக்கான சங்க ஏடு எண் 03 மனிதர்களிடமிருந்து தெரிந்து கொள்ளப்பட்டு பாவங்களுக்குப் பிராயச்சித்தமாக காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்துவதற்காக மக்கள் சார்பாகக் கடவுள் முன் ஏற்படுத்தப்பட்டவர்களே திருப்பணியாளர்கள் எனக் கூறுகின்றது.

திருப்பணியாளர்களின்பணியென்பதுபணிவாழ்வுஎன்பதுபல்வேறு துன்பங்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கும் வாழ்வாகவே காலந்தோறும் அமைந்து வருவதை நாம் திருவிவிலியத்திலும், வரலாறுகளிலும் படித்திருக்கின்றோம். இன்று நம் கண்ணெதிரே கண்டு கொண்டும் இருக்கின்றோம். குறிப்பாக எமது மண்ணில் நடந்தேறிய 30 வருட கால யுத்தத்தில் பல திருப்பணியாளர்கள் கடினமான பணிகளை நிறைவேற்றி இருக்கின்றனர். யுத்த வேள்வியில் தம்மை ஆகுதியும் ஆக்கியுள்ளனர்.

தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின் செல்லாதவன் எனக்குச் சீடனாக மாட்டான் எனக் கிறிஸ்து இயேசு கூறியதற்கிணங்க ஒவ்வொரு திருப்பணியாளரும் சிலுவை சுமக்கின்றனர். அதனூடாகவே இறையரசை இவ்வுலகில் கட்டியெழுப்ப முயற்சித்து வருகின்றனர்.

“நீங்கள் போய் எல்லா மக்கள் இனத்தாரையும் சீடராக்குங்கள்” (மத்.28:19) என்ற இயேசுவின் கட்டளைக் கல்லிற்கு உரைக்கல்லாக பணிக் குருத்துவத்தின் காலடி பதித்தவர்களே திருப்பணியாளர்களாவர். இத்திருப்பணியாளர்கள் தம் வாழ்வாலும் வார்த்தையாலும் கிறிஸ்து இயேசுவிற்கு சாட்சி பகர்கின்றனர். “கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்பது முதுமொழி. அதற்கிணங்க கத்தோலிக்க மக்களுக்கும் பங்கு ஆலயங்களுக்குமுள்ள நெருக்கம் மிகவும் பலமானது. பெரும்பாலான குடும்பங்களின் நன்மை - தீமை பிரச்சினைகளுக்கு நடுவராக வைத்துப் பார்த்தல் என்பவற்றில் பங்குக் குருவானவரே முக்கியத்துவம் பெறுகிறார். இந்த வகையில் பங்குகளில் மட்டுமன்றி குடும்பங்களின் ஆன்மீகத் தலைவராகவும் வழிகாட்டியாகவும் ஆயனாகவும் ஆசானாகவும் கடவுளின் சார்பில் திகழ்பவர்களே நமது குருக்களாவர்.

சுதேச குருக்கள் தினத்தில் நம் மத்தியிலே குருக்கள் உருவாக சிறப்பாக உழைப்போம். அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு என ஆண்டவன் அங்கலாய்க்கின்றான். ஆண்டவனின் குரல் இறை அழைத்தலின் குரல் நம் செவிகளுக்கு எட்டவில்லை. கொள்ளை நோய் தாண்டவம்ஆடும்இன்றைய காலகட்டத்தில்பல்வேறுபட்ட பணிகள்நம்முன் விரிந்து பரந்து கிடக்கின்றன. மக்கள் எத்தனையோ எதிர்பார்ப்புக்களுடன் ஆதரிப்பார் யாருமற்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர். நோயாளிகளாக, சிறையாளிகளாக, உதவியற்றவர்களாக, அநாதைகளாக, வாழ்வாதாரங்களை இழந்தவர்களாக, உறவுகளைப் பலி கொடுத்தவர்களாக - பறி கொடுத்தவர்களாக பன்முகக் கோலங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு கிறிஸ்து இயேசுவின் உண்மைச் சீடர்களாகப் பணி செய்ய வேண்டிய காலமிது.

காலத்தின் கனதியை, காலத்தின் வேண்டுகையை கருத்தில் எடுக்காமல் தான்தோன்றித்தனமாக வாழத் தலைப்படுவோமாக இருந்தால் காலத்தின் படிப்பினை நீட்சியுறுமே தவிர மீட்சியுறாது. எம்மத்தியில் எமது யாழ் திருஅவையில் பலத்த வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளது. இரத்த வங்கிகளில் இரத்தத்திற்கு தட்டுப்பாடு ஏற்படுவது போல எம் மத்தியிலும் திருப்பணிகள் மேற்கொள்ளத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொருளாதாரத்தின் பின்னடைவுகளும் நலிவுகளும் ஏற்படும் போது உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டுமென்பது பொருளியலாளரின் பொருளியல் கோட்பாடாகும். இதனை நாம் குருத்துவ அழைத்தலுக்கும் பயன்படுத்த வேண்டும்.

குருக்கள் பற்றாக்குறை என வெளிநாடுகளில் இருந்து நாம் இறக்குமதி செய்ய முடியாது நம் மத்தியிலிருந்து திருப்பணியாளர்கள் உருவாக்கப்பட வேண்டும். உதாரணமாக இவ்வருடத்தில் நாம் நீதியின் குரலொன்றையும் கலையின் சிம்மாசனத்தையும் இழந்து இருக்கின்றோம். அதனை ஈடு செய்வது யார்? அவர் தம் இழப்பு பேரிழப்பாகும் என அறிக்கை விடுத்து அவர் தம் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போம் என்பதுடன் எம் கடமை முடிந்து விட்டது எனக் கை கட்டி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கின்றோம். நம் மத்தியில் நீதி யின் குரல் ஒலிக்காதா? கலையின் பயணம் தொடராதா?

கடந்து போகும் தினங்களைப் போன்று சுதேச குருக்கள் தினத்தையும் கடத்தி விடாது சரியான தடத்தில் பயணிப்போம். பங்குகளில் இளையோர் மத்தியில் இறைவனின் அழைப்பின் குரலை செவிமடுக்கச் செய்ய பெற்றோர் பெரியோர் ஆசிரியர் மற்றும் குருக்கள் இணைந்து பணியாற்ற வேண்டும். பல இளையோர்கள் வழிதவறிச் செல்கின்றனர் எனத் தொடர் பல்லவி இசைத்துக் கொண்டிருப்பதால் எமக்கும் பயனில்லை இளையோருக்கும் பயனில்லை. இறை விசுவாச வித்துக்களை இளையோர் மனங்களில் ஆழமாக விதைத்து அவை விருட்சங்களாகி ஆகாயத்துப்பறவைகள் கிளைகளில் வந்து இளைப்பாறும் வகையில் இறையரசு இவ்வுலகில் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

எமது சிந்தனை, சொல், செயல், கனவுகள் அனைத்தும் யாக்கோபுபைப் போல் பரத்துக்கேறும் படிகளாகத் தோன்றட்டும் இறை அழைத்தல் எம் மண்ணில் எழுச்சி கொள்ளட்டும். கடுகு விதையும் புளிப்பு மாவும் உவமையாக உருக்குலையாமல் எமது கிறிஸ்தவ வாழ்வின் நிஜமாக மாறுவதாக.

# தாத்தாக்கள், பாட்டிகள் உலக நாளுக்குரிய செபம்

ஜூலை 25, கத்தோலிக்க திருஅவையில் சிறப்பிக்கப்படும், தாத்தாக்கள், பாட்டிகள் மற்றும், வயதுமுதிர்ந்தோர் முதல் உலக நாளுக்கென்று, இறைவேண்டல் ஒன்றை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வெளியிட்டுள்ளார்.

என் நம்பிக்கையும், பாறையும், அரணுமாக இருக்கின்ற ஆண்டவரே, பல வீனத்தில் என்னைத் தாங்கிப்பிடியும், உலக முடிவுவரை எந்நாளும் நீர் என்னுடன் இருக்கிறீர் என்ற உறுதியில், நீர் எனக்கு அளித்துள்ள ஒவ்வொரு நொடிப்பொழுதையும், முழுமையாக வாழ அருள்புரியும் என்று, வயது முதிர்ந்தோர் இறைவேண்டல் செய்யுமாறு, திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார்.

**திருத்தந்தையால் பரிந்துரைக்கப்படும் செபம்**

*ஆண்டவரே, உமது பிரசன்னத்தால் ஆறுதலாக இருப்பதற்கு நன்றி, தனிமையிலும்கூட நீரே எனது நம்பிக்கை, நீரே எனது பற்றுறுதி என் இளமைமுதல் நீர் என் பாறையாகவும், அரணுமாகவும் இருந்துவந்துள்ளீர்! ஒரு குடும்பத்தை, மற்றும், நீண்ட ஆயுளை எனக்கு அளித்ததற்காக உமக்கு நன்றி. மகிழ்ச்சியான, மற்றும், துன்பமான நேரங்களுக்காக, நிறைவேறியுள்ள கனவுகளுக்காக, மற்றும், இன்னும் எனக்கு முன்னால் இருக்கின்றவற்றிற்காக உமக்கு நன்றி. நீர் என்னை எதற்காக அழைத்தீரோ, அந்த புதுப்பிக்கப்பட்ட பலனுள்ள இந்த நேரத்திற்காக நன்றி. ஓ ஆண்டவரே, எனது நம்பிக்கையை அதிகரித்தருளும், அமைதியின் கருவியாக என்னை ஆக்கியருளும் என்னைவிட அதிகம் துன்புறுவோரை வரவேற்க, கனவுகாண்பதை நிறுத்திவிடாமல் இருக்க, புதிய தலைமுறைகளுக்கு உம் வியப்புக்களை எடுத்துரைக்க எனக்குக் கற்றுத்தாரும், திருத்தந்தை பிரான்சிஸ், மற்றும் திருஅவையை பாதுகாத்தருளும், மற்றும் வழிநடத்தியருளும். அதனால் நற்செய்தியின் ஒளி, உலகத்தின் முடிவுகள்வரை எட்டும். ஓ ஆண்டவரே, உமது ஆவியை அனுப்பி இவ்வுலகைப் புதுப்பித்தருளும். அதனால், பெருந்தொற்றின் புயல் தணியும். வறியோர் ஆறுதல் பெறுவர், மற்றும் எல்லாப் போர்களும் முடிவடையும். பலவீனத்தில் என்னைத் தாங்கிப் பிடியும், உலக முடிவுவரை எந்நாளும் நீர் என்னுடன் இருக்கிறீர் என்ற உறுதியில், நீர் எனக்கு அளித்துள்ள ஒவ்வொரு நொடிப்பொழுதையும், முழுமை யாக வாழ அருள்புரியும். ஆமென்.*

இச்செபத்தினை இறைமக்களைச் செபிக்குமாறு திருத்தந்தை அழைப்பு விடுக்கின்றார்.

## ‘அன்பின் மகிழ்வு’ திருத்தூது அறிவுரை மடலின் 222ம் பந்தியில், பிள்ளைகளைப் பெற்றெடுப்பதில் பொறுப்புடன் திட்டமிடுதல் பற்றி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கூறியுள்ள கருத்துக்களின் சுருக்கம்...

புதுமணத் தம்பதியர் வாழ்வை வழங்குவதில் தாராளமாக இருப்பதற்கு ஊக்குவிக்கப்படல் அவசியம். அவர்கள் பிள்ளைகளைக் கொண்டிருப்பது குறித்த குடும்பக்கட்டுப்பாடு குறித்து திட்டமிடும்போது, தங்களுக்கிடையே கலந்துபேசி, இருவருக்கும் ஏற்புடைய ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்ளவேண்டும். அந்த நிலைப்பாடு, அவர்களின் தனிப்பட்ட, மற்றும், முழு மனிதப்பண்பிற்கு ஒத்ததாய், ஒருவர் ஒருவரின் மாண்பைக் கருத்தில் கொள்வதாய் இருக்குமாறு கவனிக்கவேண்டும். மனித வாழ்வு பற்றிய திருமடல், மற்றும், நவீன உலகில் கிறிஸ்தவக் குடும்பத்தின் பங்கு குறித்த திருத்தூது ஊக்கவுரை (Familiaris Consortio காண்க.14:2835) ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். பொறுப்புள்ள பெற்றோராய் தீர்மானங்கள் எடுப்பது, அவர்கள் தங்களின் மனச்சான்றை உருவாக்குவதைப் பொறுத்தது. மனச்சான்று, ஒரு மனிதரின் இரகசிய மையம், மற்றும், புனித இடம். அங்கு ஒவ்வொரு மனிதரும் கடவுளோடு தனி யாக இருக்கிறார், மற்றும், அவரது குரலும், அதன் உள்ளாழத்தில் எதிரொலிக்கிறது. தம்பதியர், தங்களது மனச்சான்றில், கடவுளுக்கும், அவரின் கட்டளைகளுக்கும் எந்த அளவுக்கு செவிமடுக்கின்றார்களோ, அந்த அளவுக்கு, அவர்கள் எடுக்கும் தீர்மானங்கள், சுதந்திரமாகவும், சமுதாயவிதிமுறைகளுக்குஏற்புடையதாகவும் அமையும். தம்பதியர், தங்களின், மற்றும், தங்கள் பிள்ளைகளின் வருங்காலப் பொருளாதாரம், மற்றும், ஆன்மீக நலனில், அக்கறைகொண்டு தீர்மானங்களை எடுக்கவேண்டும். இறுதியில், அவர்கள், அதற்கு குடும்பக் குழு, சமுதாயம், மற்றும் திருஅவையிடமிருந்து ஆலோசனைகளையும் பெறவேண்டும். குடும்பக்கட்டுப்பாடு குறித்து திட்டமிடவேண்டியவர்கள், பெற்றோர் மட்டுமே. அவர்கள், இதனைக் கடவுளின் பார்வையில் மேற்கொள்ளவேண்டும். மேலும், அவர்கள் இதில் பயன்படுத்தும் வழிமுறைகள், இயற்கையின் சட்டம் மற்றும் கருவுறுதல் நிகழ்வை அடிப்படையாகக் கொண்டிருப்பதை ஊக்குவிக்கவேண்டும். ஏனெனில், இந்த முறைகள், தம்பதியரின் உடல்களை மதிக்கின்றன. அவர்கள் இருவருக்குமிடையே கனிவை வளர்க்கின்றன, மற்றும் உண்மையான சுதந்திரத்தைக் கற்றுக் கொடுக்கின்றன. பிள்ளைகள் கடவுளின் சிறந்த கொடை. அவர்கள், பெற்றோருக்கும், திருஅவைக்கும் மகிழ்வைக் கொணர்பவர்கள். அவர்கள் வழியாக ஆண்டவர் உலகத்தைப் புதுப்பிக்கிறார் என்ற உண்மைக்கு அதிக அழுத்தம் கொடுக்கப்படுவது முக்கியம்.

# அருட்பணி ஸ்டானின் மரணம் மனித உரிமைகள் பதிவில் அழியாத கறை

பழங்குடியின மக்களின் உரிமைகளுக்காகப் போராடியவரும், புகழ்பெற்ற மனித உரிமை ஆர்வலரும், நாற்பது ஆண்டுகளுக்குமேல் நீதியை ஊக்குவித்தவருமான, இந்திய கத்தோலிக்க அருட்பணியாளர் ஒருவர், தடுப்புக்காவலில் இறந்தது, இந்தியாவின் மனித உரிமைகள் பதிவேட்டில், என்றென்றும் ஓர் அழியாத கறையாக இருக்கும் என்று ஐ.நா. அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

உடல்நலன் மற்றும், கோவிட்-19 பெருந்தொற்றுப் பாதிப்புக்கு, மும்பை மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைப் பெற்றுக்கொண்டிருந்தவேளையில், இம்மாதம் 5ம் திகதி மரணமடைந்த 84 வயது நிரம்பிய இயேசு சபை அருட்பணியாளர் ஸ்டான் சுவாமி அவர்கள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார், மற்றும், தொடர்ந்து கேள்விகளால் நச்சரிக்கப்பட்டார் என்று, ஐ.நா. அதிகாரி மேரி லோலா அவர்கள் கூறியுள்ளார். அருட்பணி ஸ்டான் அவர்களது உடல் நிலை, சிறையில் மோசமாகி வருவதைக் குறிப்பிட்டு, அவர் விடுதலை செய்யப்படவேண்டும் என்று, பல விண்ணப்பங்கள் விடுக்கப்பட்டதையும் தவிர்த்து, அவர் தடுப்புக்காவலில் உயிரிழந்தது பற்றிக் கேள்விப்பட்டு நான் நிலைகுலைந்தேன் என மேரி லோலா அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் பற்றி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, ஐ.நா.வால் 2020ம் ஆண்டு மே மாதம் முதல் திகதி நியமிக்கப்பட்ட சிறப்பு அதிகாரி மேரி லோலா அவர்கள், இந்திய அதிகாரிகள், உலகளாவிய மனித உரிமைகள் சட்டத்தை மதிப்பதற்குக் கடமைப்பட்டுள்ளனர் என்பதை ஐ.நா. அதிகாரிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர், அவர்களோடு தானும் இணைந்து குரல்கொடுத்ததாகத் தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அருட்பணி ஸ்டான் சுவாமி அவர்கள் ஏன் விடுதலைசெய்யப்படவில்லை, ஏன் அவர் தடுப்புக்காவலில் இறக்கவேண்டும்? என்ற கேள்விகளை, தான் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருப்பதாகவும், மேரி லோலா அவர்கள் கூறியுள்ளார்.



# குருத்துவத்தில் 60 ஆண்டுகள் நிறைவு செய்யும் அருட்தந்தை லூயிஸ் பொன்னையா (அமதி) அடிகள்

**தமிழ் இன உணர்வையும் தனக்கே உரித்தான குண இயல்புகளோடு, கிறிஸ்துவின் மனநிலைகளைத் தனதாக்கி இன்றும் இறைவனுக்கும் எமக்கும் பணியாற்றி வருகின்றார்**

அருட்தந்தை லூயிஸ் பொன்னையா (அமதி) அடிகள்

"மெல்கிசதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே" (எபி 5:6) என்ற இயேசுவின் நித்திய குருத்துவத்தில் இணைந்து தனது 60 வருட வைர விழாவினைக் கொண்டாடும் அமல மரித்தியாகிகள் சபையைச் சார்ந்த எமது புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில், சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக நிரந்தர மெய்யியல் துறை விரிவுரையாளராகவும், ஆன்மீக குருவாகவும் இருந்து, பணிவிடை ஏற்க அல்ல, பணிவிடை புரியவே வந்தேன், என்பதற்கு ஏற்ப பணியாற்றி வரும் மூத்த குரு அருட்தந்தை லூயிஸ் பொன்னையா அடிகளாரை உள்ளன்போடும் நன்றி கலந்த இதயத்தோடும் மனமார வாழ்த்தி நிற்கின்றோம்.

அமலமரித்தியாகிகள் சபையின் மூத்த குருவாகிய இவர் 1930ம் ஆண்டு ஆவணி மாதம் 22ம் திகதி மலேசியாவில் திரு. திருமதி பொன்னையா மரியம்மா தம்பதிகளுக்கு 4வது அன்பு மகனாகப் பிறந்தார். ஆரம்ப உயர்நிலைக் கல்வியை மலேசியாவில் மேற்கொண்டு, பெற்றோரோடு இலங்கை நாடு திரும்பி யாழ். புனித யுவானியார் பங்கில் உள்ள 'பொன் மரியா' இல்லத்தில் வாழ்ந்து வந்தார். தனது உயர் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நிறைவு செய்து, தொடர்ந்து இறைவனின் குரலுக்கு செவி கொடுத்து, அ.ம.தி துறவற சபையில் தன்னை இணைத்து, களுத்துறை சந்நியாச மடத்தில் ஆரம்ப பயிற்சியையும், உரோமை குருத்துவக் கல்லூரியில் குருத்துவக் கல்வியினையும் நிறைவு செய்து, 1961ம் ஆண்டு ஆடி மாதம் 21ம் திகதி உரோமை நகரில் அமல மரித்தியாகிகள் குருவாக அருட்பொழிவு பெற்றார்.

நீண்ட ஆயுள் இறைவனின் ஆசீர்வாதம் என்பதற்கு ஏற்ப 90 ஆண்டுகள் வயது எல்லையைக் கடந்தும் 60 ஆண்டுகள் குருத்துவ அர்ப்பண வாழ்வினைக் கடந்தும் இன்றும் தளரா மன உறுதியோடு, ஏழ்மை, பணிவு, கற்பு என்ற வாக்குறுதிகளை வாழ்வாக்கி, தூய்மையான குருத்துவப் பணி வாழ்வை வாழ்ந்து வருகின்றார்.

யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்டங்களில் பல பங்குதளங்களில் பங்குத்தந்தையாகக் கடமையாற்றி கண்டி தேசிய உயர் குருமடத்தில் விரிவுரையாளராகவும் உருவாக்குனராகவும் பணியாற்றினார்.

அமல மரித்தியாகிகள் யாழ் மாகாணத் தலைவராக இருமுறை போர்க்கால சூழ்நிலையில் தலைமை தாங்கி, தனது சபையின் மறுமலர்ச்சிக்காகவும் ஆன்மீக புதுப்பித்தலுக்காகவும் உழைத்தார். ஒரு சிறந்த யதார்த்த பூர்வமான மறை உரையுரையாளனாக இறைவாக்கினர்களுக்கே உரிய உறுதிப்பாடுடன் இதோ பார்! என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன். பாடுங்கள், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும் என்னை நான் ஏற்படுத்தினேன் (ஏரே.1.10) என்பதற்கு ஏற்ப, இறைவார்த்தையை, திருச்சபைக் கொள்கைகளை துணிவுடன் எடுத்து உரைத்தார். இதனால் பலர் தமது வாழ்வினை மாற்றி, மனம் திரும்பி புதிய இறை மனித வாழ்வினை வாழ, வழி காட்டினார்.

தனது மெய்யியல், இறையியல், கல்வியறிவினை எதிர்காலக் குருக்களுக்கு வழங்க யாம் புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவ கல்லூரியில் சுமார் 25 வருடங்களுக்கு மேலாக மெய்யியல் கல்வியை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றார்.

நீண்ட குருத்துவப் பணிவாழ்வின் அனுபவத்தையும், கண்டிப்பும் சுயகட்டுப்பாடும் நிறைந்த இறை ஆன்மீகத்தையும், துறவிகளுக்கே உரிய ஆடம்பரம் இல்லாத எளிமையான வாழ்க்கை முறையையும், தமிழ் இன உணர்வையும் தனக்கே உரித்தான குண இயல்புகளோடு, கிறிஸ்துவின் மனநிலைகளைத் தனதாக்கி இன்றும் இறைவனுக்கும் எமக்கும் பணியாற்றி வருகின்றார். அருட்தந்தை அவர்கள், அமதிகள் சபைக்குக் கிடைத்த குருத்துவ முத்து, எமது குருமடத்துக்குக் கிடைத்த அறிவு வைரம். திருச்சபைக்கு கிடைத்த அரிய வரம். இயேசுவின் குருத்துவத்துக்கு சான்று பகரும் சாதனைக் குருவே, அமதிகளின் ஆன்மீகக் குருவே, மெய்யியலின் புதிய அக்குவைனசே, மறை உரையின் சம்மட்டியே, பணிக்குருத்துவத்தின் பணிவே, உங்களை நாங்கள் நன்றி உணர்வோடும் இறை ஆசீரோடும் வாழ்த்துகின்றோம்.

அருட்பணி A.ஜேம்ஸ்நாதன்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருமட குழுமம் சார்பாக

# சந்தியோகுமாயோர் அம்மானை

## – பல்நோக்குப் பார்வை

ஈழத்தில் போர்த்துக்கேயர் காலத்தில் தோன்றிய ஓர் கத்தோலிக்கச் சமயச் சார்புடைய இலக்கியம் சந்தியோகு மாயோர் அம்மானையாகும். இது அம்மானை இலக்கியத்தின் வடிவையும் அமைப்பையும் தழுவி சிறந்த ஓசை, நயத்துடன் பேதுருப்புலவரால்இயற்றப்பட்டது. பேதுருப் புலவர் புனித பெரிய யாக்கோபுவின் கதையை தமிழ்ப் பண்பாட்டுச் சூழலை உள்வாங்கி மண்வாசனை மிக்கதாக இயற்றியிருக்கின்றார். இதன் வழியாய் கத்தோலிக்க இறையியல் கருத்துக்கள் பல எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

ஈழத்தில் கத்தோலிக்க மதம் பரவிய வரலாறு போர்த்துக்கேயரின் வருகையுடன் ஆரம்பமாகின்றது. கி.பி 1505இல் தமது வர்த்தகத்தைப் பெருக்கிக் கொள்ளும் நோக்குடன் இலங்கை வந்த போர்த்துக்கேயர் தாம் ஆதரித்த கத்தோலிக்க மறையைப் பரப்பும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர். இதற்காக முதன் முதலில் 1543ஆம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த குழுவினர் இங்கு வந்தனர். அவர்களைத் தொடர்ந்து 1602இல் இயேசு சபையைச் சேர்ந்த மறைத்தூதுக் குழுவினர் வருகை தந்ததோடு அவர்கள் வடபகுதியை மையப்படுத்தி தமது மறைபரப்புப் பணியை முன்னெடுத்தனர். அக்காலத்தில் யாழ்ப்பாண இராட்சியத்தின் தலைநகராக தெல்லிப்பளை விளங்கியதால் இயேசு சபைக் குருக்களும் அதனைத் தமது தலைமை இடமாகக் கொண்டு 1633 இல் புனித பேதுரு - பவுல் பெயரில் ஓர் ஆலயத்தைக் கட்டி அங்கிருந்து கொண்டு பல இடங்களுக்கும்சென்றுமறைபணியாற்றிப் பல ஆலயங்களையும் கட்டினர். இவ் வண்ணம் கிளாலியில் புனித பெரிய யாக் கோபுவின் பெயரிலும் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயம் இன்றும் அவ்விடத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

புனித பெரிய யாக்கோபுவின் மீது அதீத பற்றுக்கொண்ட பங்கு மக்கள் ஒன்றிணைந்து இவ் ஆலயத்திற்கு அருகில் மிகப் பிரமாண்டமான புதிய ஆலயம் ஒன்றினை இன்று கட்டியிருப்பதோடு இப்புதிய ஆலயம் கடந்த வாரம் மேன்மை மிகு யாழ். மறைமாவட்ட ஆயரினால் அபிஷேகம் செய்யப்பட்டு திறந்து வைக்கப் பட்டுள்ளது.

போர்த்துக்கேய மறை பரப்பாளர்களால் கட்டப்பட்ட ஆலயம் அக்காலத்தில் ஒரு திரு யாத்திரைத் தலமாக விளங்கியது. பல இடங்களிலும் இருந்து புனிதரின் விழாவைக் கொண்டாட இறைமக்கள் இங்கு ஒன்றுகூடுவது வழக்காயிற்று. இவ்விதம் ஒன்று கூடும் இறை மக்களுக்கு புனித பெரிய யாக்கோபுவின் வரலாற்றை எடுத்துக்கூறும் நோக்குடன் இயற்றப்பட்டதே சந்தியோகு மாயோர் அம்மானையாகும். அம்மானை என்பது பழந் தமிழ் நாட்டில் பெண்கள் விளையாடிய விளையாட்டுக்களில் ஒன்று. இவ்விளையாட்டின் போது மூன்று பெண்கள் அமர்ந்திருந்து சிறிய பந்து போன்ற மூன்று அம்மானைக் காய்களை மேலே எறிந்தும், ஏந்தியும் ஆடிப்பாடி விளையாடி மகிழ்ந்தனர். அவ்வாறு ஆடிப்பாடும் போது ஒருவரை ஒருவர் விழித்து "அம்மானை" எனக்கூறி முடிப்பர். இதனால் இப்பாடல் அம்மானைப் பாடல் எனப்பட்டது.



அம்மானை இலக்கிய வடிவத்தைத் தழுவி, புனித பெரிய யாக்கோபுவின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, கத்தோலிக்க இறையியல் கருத்துக்கள் பலவற்றை உள்ளடக்கி, ஈழத்தில் பேதுருப் புலவரால் போர்த்துக்கேயர் காலத்தில் இயற்றப்பட்ட ஒரு கத்தோலிக்க சமய சார்புடைய இலக்கியமே சந்தியோகுமாயோர் அம்மானை.

**திரு. த.இ.ரங்கநாயகம்**
**ஆசிரியர்**

இவ்விதம் நாட்டுப்புறப் பாடல்களாகத் தோற்றம் பெற்ற அம்மானைப் பாடல்கள் பின்னர் இலக்கியங்களிலும் இடம்பெறத் தொடங்கின. ஆரம்பத்தில் சில பிரபந்தங்களின் உள்உறுப்பாக விளங்கிய அம்மானைப் பாடல்கள் காலப்போக்கில்தனிஇலக்கியங்களாகவளர்ச்சியடைந்தன. இவ்விதம் வளர்ச்சி கண்ட கதைப் பாடல் அம்மானையின் வடிவையும் அமைப்பையும் தழுவி தென்னிந்தியாவிலும் ஈழத்திலும் 83ற்கும் அதிகமான கிறிஸ்தவ அம்மானைகள் தோன்றியிருப்பதை அறிய முடிகின்றது.

சந்தியோகுமாயோர் அம்மானை ஈழத்தில் தோன்றிய முதல் கிறிஸ்தவ அம்மானையாகும். இது தெல்லிப்பளையில் வாழ்ந்து வந்த ஆரிய கோத்திரத்தைச் சேர்ந்த பேதுருப் புலவரால் இயற்றப்பட்டது.

போர்த்துக்கேயமறைபரப்பாளர்களின் மறைப்பணியால் மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றுக்கொண்ட பேதுருப் புலவர் தெல்லிப்பளை பேதுரு - பவுல் ஆலயத்தில் பணியாற்றிய இயேசு சபைக் குருவான சுவாங்கறுவால் லூயிஸ் அடிகளார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, முன்னர் விருத்தம், அகவல் ஆகிய வடிவங்களில் பாடப்பட்ட புனித பெரிய யாக்கோபுவின் கதையை, அக்காலத்தில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த அம்மானை வடிவில் 1647ஆம் ஆண்டு இயற்றினார்.

சந்தியோகுமாயோர் அம்மானை இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் ஒருவராகிய புனித பெரிய யாக்கோபுவின் வாழ்வினைக் கதையாகக் கொண்டு இயற்றப்பட்டது. பாலஸ்தீனாவின் கலிலை நகரில் வாழ்ந்த செபதேயு, சலோமி என்போரின் மகனான யாக்கோபு இயேசுவால் அவரது தூதுப்பணியை முன்னெடுக்க அழைக்கப்பட்டு பயிற்றப்பட்டவர். இயேசுவின் உயிர்ப்பிற்குப் பின் அவரைப்பற்றிய நற்செய்தியை யூதேயாவிலும் பின்னர் இஸ்பானியா தேசத்திலும் எடுத்துரைத்தார். இஸ்பானியாவில் இருந்து யூதேயாவிற்குத் திரும்பி வந்தபோது ஏரோது அக்கிரிப்பா மன்னனால் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இவரே இயேசுவின் திருத்தூதர்களில் முதல் வேத சாட்சியாய் மரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாக்கோபுவின் சீடர்கள் அவரது உடலை இஸ்பானியாவுக்கு எடுத்துச் சென்று எல் பட்டன் (El Padron) என்னுமிடத்தில் அடக்கம் செய்தனர். கி.பி ஒன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாக் கோபுவின் புனித உடல் அடக்கம் செய்யப்பட்ட இடம் கண்டுபிடிக்கப்பட்டதோடு, மன்னன் இரண்டாம் அல்போன்சின் கட்டளைப்படி புனிதரின் உடல் அங்கிருந்து எடுக்கப்பட்டு நான்கு மைல்கள் தொலைவிலிருந்த 'கொம்பெஸ்ரேலா' (Compostella) என்னுமிடத்தில் மீண்டும் அடக்கம் செய்யப்பட்டதோடு அங்கு ஒரு ஆலயமும் கட்டப்பட்டது.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# காவலன் கலசம்

## கார்மேல் அன்னையின் வழிகாட்டலில்

அருட்சகோதரி பவளராணி ஞானப்பிரகாசம். அ.கா

ஆடிமாதம் உலகவாழ் கார்மேல் துறவற சமூகத் தினருக்கு இறையாசீர் பொழியும் விஷேட மாதமாக விளங்குகின்றது. கார்மேல் மாதாவிற்கு அர்ப்பணிக்கப் பட்ட இம்மாதத்தில் 12ம் நூற்றாண்டில் கார்மேல் சபைத் தலைவராக இருந்த "சைமன் ஸ்ரொக்" என்னும் துறவிக்கு கார்மேல் மாதா தன்னை வெளிப்படுத்திய நிகழ் வினை நினைவு கூருகின்றோம். பழைய ஏற்பாட்டில் கார்மேல் மலை சில முக்கிய சம்பவங்கள் நடைபெற்ற மலை யாகக் கருதப்படுகின்றது. கார்மேல் மலையில் இறை வாக்கினர் எலியா பாகால் தெய்வத்தை வழிபடும் கூட்டத் தினருக்கு யாவே ஒருவர் தான் இறைவன், அவரால் தான் இவ்வுலகம் படைக்கப்பட்டதும், பராமரிக்கப்படு கின்றதாகவும், அவர் ஒருவரே இறை வணக்கத்துக்குரிய கடவுள் என்பதை அற்புதத்தினால் நிரூபித்தார். மூன்று வருடங்களாக மழையின்றி வரண்டு போயிருந்த இஸ்ரா-யேல் நாட்டிற்கு எலியா இறைவாக்கினரின் வேண்டு தலினால் மழைபொழியப்பட கார்முகில் தோன்றியதும் இம்மலையில்கான். இறைவாக்கினர் எலியா அவ ரைத் தொடர்ந்து பலர் இறையன்பினை ஆழ்ந்த தியானத்தின் மூலம் பெறுவதற்கு இம்மலையில் கூட்டாக வாழ்க்கை வாழ்ந் ததாகக் கூறப்படுகின்றது.



12ம் நூற்றாண்டில் பல இன்னல்கள், படையெ டுப்பிற்கு முகம் கொடுத்த கார்மேல் துறவிகள் விசு வாசத்துடன் மரியன் னையை நோக்கி செபித்த பொழுது கார்மேல் மாதா அன்றைய கார்மேல் துற வற சபையின் தலைவ ராக இருந்த அருட்தந்தை சைமன் ஸ்ரொக் என்பவ ருக்குக் காட்சி கொடுத்து உத்தரியத்தை அவருக்குக் கொடுத்து "இது கார்மேல் சபையின் சின்னமாகவும், அதனை அணிபவர்கள் அவ ரின் பிள்ளைகளாகவும் இருப்பார்கள் எனவும், மரண வேளையில் இதனை அணிந்திருப்பவர்கள் நரகவேத னையிலிருந்து விடுவிக்கப்படுவர்" எனவும் வாக்க ளித்தார். இவர்கள் மரியாளை தம் பாதுகாவலியாகவும், வழிகாட்டியாகவும், அரசியாகவும் ஏற்றுக் கொள்கின்ற னர். இத்துறவிகள் ஆழ்நிலைத் தியானத்தில் இறையனு பவத்தைப் பெற தம்மை ஒறுத்து வாழ்ந்து வருகின்றனர். இன்று கார்மேல் சபையில் ஆண்துறவிகள் 1வது நிலை யிலும் ஆழ்நிலைக் கார்மேல் பெண்துறவிகள் இரண் டாவது நிலையிலும் உலகெங்கும் பரந்து வாழ்ந்து வருகின்றனர். மூன்றாவது நிலையாக அப்போஸ்தலிக்க கார்மேல் துறவிகள் செபத்துடன் அப்போஸ்தலிக்க சேவை யும் இணைந்த வாழ்வை வாழ்ந்து வருகின்றனர்.

அப்போஸ்தலிக்க கார்மேல் சபை ஸ்தாப-கரான ஆங்கிலப் பெண் ஆழ்நிலை கார்மேல் துறவி யாக பிரான்சில் வாழ்ந்த பொழுது இறைவனின் விஷேட அழைப்பைப் பெற்ற அவர் இந்தியாவில் உள்ள இளம் பெண்களுக்குக் கல்வி மற்றும் சமூகசேவை மூலம் இறைய னுபவத்தைக் கொடுக்க அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினைப் பிரான்சில் ஆரம்பித்து அருட்சகோதரிகளை பயிற்றுவித்து இந்தியாவில் பங்களூருக்கு அனுப்பினார். அவர்கள் 1870ல் ஆரம்பித்த பணி இன்று இந்தியாவின் பல பாகங்களுக்கும் பரவி 1922ல் இலங்கையின் இயற்கைத் துறைமுகமான திருகோணமலையில் தம் பணியினை ஆரம்பித்தனர். 2022ல் தம் நூற்றாண்டுப் பணியினை நிறைவு செய்யும் அப்போஸ்தலிக்க கார் மேல் சபை அருட்சகோதரிகள் இன்று சிறீலங்காவில் நாற்பது கன்னியர் இல்லங்களையும் பாகிஸ்தானில் நான்கு இல்லங்களையும் ஆரம்பித்து தம் பணி-யினை கல்வி மூலமும் ஏனைய சமூகநலப் பண-'கள் மூலமும் அனைத்து வயதினர், சமூகங்களுக்குத் சேவை செய்து வருகின்றனர். கார்மேல் மாதாவைத் தம் பாதுகாவலியாகக் கொண்டுள்ள அருட்சகோதரிகள் மரியாளின் வாழ்வில் இருந்த பல இறைப் பண்புகளைப் பின்பற்றி வாழ அழைக்கப்படுகின்றனர்.

இறைமகன் இயேசு தம் பணி இவ்வுலகில் தொடரதன் தாயாரை எமக்குத் தாயாராக, துணையாக கல்வாரி மலை யில் சிலுவையில் தன் வேதனையின் மத்தியிலும் தனது கொடையாக எமக்குத் தந்தருளினார். தன் தாயாரிடம் இருந்து தான் கற்றுக் கொண்ட இறைபுண்ணியங்களை நாமும் கற்று வாழவேண்டுமென்பதே அவர் நோக்கம். இதை சித்தப்படி மீட்புப்பணி நிறைவேற அவர் தன் மகன் இயேசுவை விண்ணில் இருந்து மண்ணுலகிற்கு அனுப்ப மரியாளைத் தெரிந்து அவர் மூலம் இயேசு மனிதனானா-ரோ அது போன்று மரியாளின் மூலம் இயேசுவை அடைவது இறைவனின் சித்தமாயிற்று. மரியாளின் மூலம் அருள்கள், ஆசீர்கள், வழங்குவதன் மூலம் தொடர்ந்தும் மரியாளை அவர் மகிமைப்படுத்து கின்றார். மரியாள் பல இடங்களில் பலருக்குக் காட்சி கொடுத்துத்தன் மகனிடம் உலகை அழைத்துச் செல்ல விசுவாசத்தை ஆழப்படுத்துகின்றார். அவ் வகை யில்மரியாளைபாதுகாவலியாகக்கொண்டகார்மேல் சபைக்கும் அவரின் வழிகாட்டல்கள் ஆசீர்கள் ஏராளமாக உண்டு.

இறைமகன் இயேசு தன் தெய்வீகத்தை வெறுமையாக்கி தாழ்மையின் உருவாக மனிதனாக மரியன்னையின் வயிற்றில் உதிக்க மரியாளின் தாழ்ச்சியே காரணமாயிற்று. எந்த ஒரு மனிதனும் சாதாரண வாழ்வில் பணிவாக இருப்பது இலகுவா-கலாம் ஆனால் வெற்றியின் உச்சியில், புகழின் மத்தியில் பணிவாக இருப்பது அது உயர்வான புண்ணியமாகும் என புனித பேணாட் கூறுகின்றார். மரியாள் இறைவனின் தாயாகத் தெரிந்தெடுக்கப்பட்ட வேளையிலும் பணிவாகத் தனது மாட்சிக்கும் புக ழிற்கும் மூலகாரணம் இறைவனே என்பதனை உணர்ந்து அவரையே மேன்மைப்படுத்தினார். அனைத்துப் புண்ணியங்களும் தாழ்மை எனும் வேரிலிருந்து வளர்கின்றது. தாழ்ச்சி மனிதனை மேன்மையுள்ளவனாக சமூகத்தில் உயர்த்து கின்றது. இறைபணியில் நாம் எவ்விதம் அர்ப்பணிப் புடன் பணிபுரிந்தாலும் தாழ்ச்சி எனும் புண்ணியம் நம்மிடம் இல்லையாயின் அதுவே எம் பணிக்கும் ஆன்மீக வாழ்விற்கும் வீழ்ச்சியாக மாறும். எனவே எம் அப்போஸ்தலிக்க வாழ்வு பயன் தர வேண்டு மாயின் அது தாழ்ச்சியின் பங்களிப்பிலேயே தங்கி யுள்ளது. இறைவன் முன்னிலையில் நாம் எம்மை வெறுமையாக்கி, தாழ்மையுள்ளவர்களாக வாழ்ந் தால் மட்டுமே இறையாசீர்களை பெறமுடியும். "பெருமையுள்ளோரை இறைவன் சிதறடித்தார்" எனும் உண்மை மரியாளின் புகழ்ச்சிப் பாடலில் வெளிப்படுகின்றது.

ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை போன்று மரி யாள் விசுவாசத்தின் பெண்ணாக இருக்கின்றார். அவர் எப்பொழுதும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இறை வனின் சித்தத்திற்கு அமைவாக வாழ்ந்தார். கபி ரியேல் வானதூதர் இறைசித்தத்தை வெளிப்படுத் தியதைத் தொடர்ந்து கிறிஸ்து பிறப்பில் சிமியோனின் வார்த்தைகளில் மரியாள் பலவற்றை விளங்கிக் கொள்ளமுடியாதிருந்தபோதும் அவற்றையெல்லாம் அமைதியுடன் உள்வாங்கி அதற்கேற்ப நடந்தார். மரியாளின் முன்மாதிரிகையை பின்பற்றி எம் வாழ்வில் வரும் அனைத்து சம்பவங்களிலும் இறைவன் சித்தம் எமக்கு நன்மை தரும் எனும் விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டால் நாம் என்றும் இறைவனில் மகிழ்வுடன் வாழலாம். "இருளின் பள்ளத்தாக்கில் நாம் நடந்தாலும் இறைவனின் கரம் எம்மை வழிநடத்தும்" என்று 22வது சங்கீதம் எமக்குக் கூறுகின்றது. இறைவன் எம்மைவிட்டு ஒரு போதும் விலகுவதில்லை. எம்வாழ்வில் இடர் நேரி டும் போது மரியாளை நோக்கிக் கரம் குவிப்போம். கானா ஊரில் மக்களின் இடர் கண்டு தன் மகனிடம் கூறிக் குறை தீர்த்தது போன்று எம் இடரையும் இறை சித்தப்படி தீர்த்து வைப்பார்.


மரியாளின் வாழ்வு இறைவனுடன் ஒன்றித்த வாழ்வாக இருந்தது. அவரின் இதயம் இயேசு குடி யிருக்கும் கோவில் அன்பின் தீச்சுவாலை அவர் உள்ளத்தில் எப்போதும் சுடர்விட்டு எரிந்து கொண்டி ருந்ததினால் அவர் சொல், செயல் அனைத்தும் அன்பின்வெளிப்பாடாகஇருந்தது. மரியாளின்ஆழ்ந்த செபவாழ்வு வாழ்வினை நாமும் பின்பற்றி வாழ அவரிடம் வேண்டுவோம். இறைமகன் இயேசுவின் பணியில் வாழ்கின்ற எம் வாழ்வு ஆழமான செப அனுபவத்தின் வாழ்வாக இருந்தாலன்றி, எம் வாழ் வில் வரும் சவால்கள் தடைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. எம் பணியினையும் வெற்றிகர மாக மக்களுக்கு ஆற்ற முடியாது. கார்மேலில் தோட்டத் தில் வாழ்ந்து இன்று திருஅவை யின் புனிதர்க ளாக விளங்கும் அவிலாதெரேசா, சின்னத் தெரேசா, எலிசபேத் போன்ற பலர் ஆழ்ந்த செப அனுபவத்தி னால் இயேசுவுடன் ஒன்றித்த வாழ்வினால், சுவர்க ளுக்குமத்தியில்வாழ்ந்தும்பலஉள்ளங்களைஇறை வன் அரசிற்கு அழைக்கின்றனர். கார்மேலில் வாழ்வது செபத்தில் வாழும் வாழ்வாகும். கார்மேல் அன்னையின் திருவிழாவினைக் கொண்டாடும் நாம்மரியாளைப்பின்பற்றிசெபவாழ்வுவாழ்வோம்.

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

**05**

**நான் குருவாகி ஓர் இறை யியலாளராக உருவெடுத்த தன் பின்பு, பெரும் பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கி யிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.**

*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*



### அத்தியாயம் 2

**2.2 ஆசியக் கண்டத்தில் தோன்றிய வாழ்க்கை முறைகள் - மார்க்கங்கள்**

ஆசியக் கண்டத்தில் தோன்றிய வாழ்க்கை வழி முறைகள், சீனாவில் கொன்பூசியஸ் ஊடாகவும், இந்தியாவில் இந்து ஞானிகள் ஊடாகவும் தோன் றின. இவைகள் பின் தோன்றிய மதங் களைப்போல் தெளிவான வரையறுக்கபட்ட, கோட்பாடுகளையும் ஒழுங்கு அமைப் புகளையும் தலைவர்களையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட மக்கள் அவர்களின் சூழல், இயற்கை, இறை ஏவுதல்கள் கொண்ட மூதாதையர், ஞானம் அடங்கிய வாழ்க்கை முறையாக - மார்க்கமாக - இருந்தது. சுருங்கக் கூறின், மார்க்கம் அல்லது வாழ்வு முறை என்பது, வாழ் விற்குத் தேவையான சகலத்தையும் - மொழி கலை கலா சாரம், தெய்வீக ஏவுதல்கள், உணர்வு சிந்தனை முறைகள் எல்லாவற்றையும் ஒன்றாக மனிதருக்கு வழங்கியது.

ஆகையினால் 16ம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் தமிழர்களை வந்தடைவதற்கு முன்பும், வாழ்வில் குறை யில்லாதவர்களாக வாழ்ந்தனர். இறைவனை ஆராதிக் கவும் (மதம்) மனித வாழ்வைக் குடும்பத்திலும், சமூகத்தி லும், வாழ்வதற்குத் தேவையான ஞானத்தையும் அறிவை யும் மூதாதையர் ஞானிகள் திருக்குறள் நானூறு, போன்ற பல வழிகளில் கற்றறிந்தனர். தேசவழமை நடைமுறை யில் இருந்தது. ஆகையினால் பிரச்சினையின்றி சுமூகமாகப் பல நூற்றாண்டு களாகத் தமிழர் வாழ்வு முழு மனித வாழ்வாகப் போய்க் கொண்டிருந்தது.

**2.3 யூத விடுதலைப் பயணத்திலும், இறைமகன் இயேசுவி லும், இறைவன் தம்மை வெளிப்படுத்தினார்.**

மத்திய கிழக்கில் இறைவனின் வெளிப்படுத்தல் யூத மக்களின் சரித்திரத்தைத் தழுவியது. இறைவன் ஆபி ரகாம் என்பவரை அழைத்து புதுமையான வழிகளிலே அவரைப் பல இனங்களுக்கு தந்தையாக்கினார். இந்த இனங்களில் ஒன்றான யூத இனம் எகிப்தியரின் பிடியில் அடிமைகளாகத் தவித்தனர். இவர்களுக்கு இறைவன் மோயீசன் வழியாக, எகிப்திய பார்வோனின் முன் நிலை யில் - என் மக்களைப் போக விடு - என்ற செய்தியுடன் அவர்களின் விடுதலைப் பயணத்தில் செயற்பட்டார்.

இறைவாக்கினர் முன் கூட்டியே அறிவித்தபடி, யூதரின் தாவீதின் குலத்தில் இயேசு இறை மகன் தோன்றி னார். தமது போதனை, பாடுகள் சிலுவை மரணம் உயிர்ப்பினால், கிறிஸ்தவத்திற்கு அஸ்திவாரமிட்டார்.

இச் செய்தியைத்தான் அவருடைய சீடர்கள் யூதேயாவிலும் அயல் நாடுகளிலும் ஆர்வத்துடன் பரப்பினர். ஆனால் இச் செய்தி 16ம் நூற்றாண்டுவரை தமிழராகிய எம்மை வந்தடையவில்லை.

கிறிஸ்தவத்தின் ஆரம்பத்தில் இறைவன் தம்மை ஒரு விடுதலைப் பயணத்தில் வெளிப்படுத்தினார். இஸ்ரவே லரை எகிப்திய அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்க, மோயீ சனைத் தேர்ந்தெடுத்து எகிப்திய பார்வோனின் முன்னால் - 'என் மக்களை வாழ விடு' - என்ற கட்டளையுடன் விடு தலையை ஆரம்பித்தார்.

(இக் காரணத்தைக் கொண்டே, ஈழத் தமிழரின் போராட் டத்தில், நான் எனது கிறிஸ்தவ குரல் கொடுக்க ஆரம்பித்த பொழுது, ஆங்கிலத்திலும் தமிழிலும் ஜேர்மனிலும் பிரெஞ்சு மொழிகளிலும் - Let my people go = என் மக்களைப் போக விடுங்கள் - என்ற தலைப்பில் சிறு புத்தகங்களை வெளியிட்டேன்.)

**2.4 பல் மதங்கள் மத்தியில் கிறிஸ்தவமும் ஒரு மதம்.**

இறைவனே அனைத்து மதங்கள் தோன்றுவ தற்கும் காரண ஊற்றாகவும் முடிவுமாக இருப்பதன் காரண மாக, கிறிஸ்தவர்களாகிய நாம் கடந்த காலத்தில் எமது திரு அவை பற்றியும் மத மாற்றங்கள் பற்றியும் வைத்திருந்த புரிந்துணர்வை மாற்றி அமைக்க வேண் டும். 2ம் வத். சங்கத்தைத் தொடர்ந்து, விசுவாசத்தைப் பரப்புதற்கு பொறுப் பாயிருந்த உரோமைத் தலைமைப் பீடத்தின் பெயர் (Propagation of Faith) மாற்றப்பட்டது. தற்போது கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நாம் மனம் திரும்பி மத மாற்றத்தை நோக் காகக் கொண்டு செயற்படுவதில்லை. ஆனால் இயேசுவின் நற்செய்தியைப் பறை சாற்றுபவர்களாகச் செயற்படுகின்றோம்.

உரோமைத் தலைமைப் பீடம், இப்போது நற் செய்தி பரப்புவதற்காகச் (Evangelization of People ) செயற் படுகின்றது.

(தொடரும்..)




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(நாதன, யாழபபாணம)*
**கேள்வி: அண்மையில் நீங்கள் படித்த, உங்களுக்குப் பிடித்த ஒரு சிந்தனையைக் கூறுவீர்களா?**
**ப:** படித்தபோது எனக்குப் பிடித்தது மட்டுமல்ல, என் இதயத்தைச் சுட்ட வரிகள்! ஒரு சிப்பி வரைகின்றான்: 'என் பணி தொடங்கும்போது நீ கல், நான் சிற்பி. என் பணி முடிந்தவுடன் நீ கடவுள், நான் தீண்டத்தகாதவன்!' என் இதயம் நின்று துடித்த இன்னுமொரு கணம்: இவ்வரிகளைப் படித்தபோது ஏற்பட்டது!

*(மேரி, யாழ்ப்பாணம்)*
**கே: தமிழர்களின் பலவீனங்களில் ஒன்று அயலவர்கள், அருகிலுள்ளவர்கள் என்ன செய்கின்றார்கள் எனப் பார்த்து அதனையே தாங்களும் செய்வது! அது வீடு கட்டுவதில் இருந்து உழைப்பது, சேமிப்பது, பிள்ளைகளைப் பெறுவது, வளர்ப்பது எனத் தொடரும்! இதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்!**
**ப:** மேரி, மற்றவர்கள் என்ன செய்கின்றார்கள் என்று பார்ப்பதில் தவறில்லை. ஆனால், அன்ன நடை நடக்கப்போய் தன்னடை கெட்ட காக்கைபோல சிலவேளைகளில் மற்றவர்களைப் பார்த்துப் பிரதிசெய்வதால் தங்களுடைய சுயத்தை இழக்க நேரிடும்! அடுத்தவனின் அடுப்பில் அவிகின்றதை ஆராய்ச்சி செய்வதை விடுத்து தங்களுடைய அடுப்பில் கருகிக் கொண்டிருப்பதை ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும்!

*(ஜூடித், யாழ்ப்பாணம்)*
**கே: தங்களுடைய ஆட்சியில் ஈன இரக்கமின்றித் தமிழர்களைக் கொன்று குவித்துவிட்டு இப்போது கொரோனாத் தொற்றிலிருந்து காப்பாற்ற தடுப்பூசிகளை வடமாகாண தமிழ் மக்களுக்குத் தாம் விசேட விதமாக ஏற்பாடு செய்திருப்பதாக அரச தலைவர் கூறியிருப்பதாகச் செய்திகள் அவ்வப்போது தெரிவிக்கின்றன. இந்த முன்னுக்குப் பின் முரணான செயல்களின் அர்த்தம் என்னவோ?**
**ப:** ஜூடித் அக்கா, பழிதீர்க்கத்தான்!

*(அமலன், மன்னார்)*
**கே: சிலர் செய்தவற்றை நினைக்கின்றபோது அவர்களை மன்னிப்பது கஸ்ரமாக இருக்கின்றது? எப்படி மன்னிப்பது?**
**ப:** அமலன், ஏறக்குறைய இருபத்தேழாண்டுகள் சிறையில் இருந்து விடுதலை பெற்று வெளியே வந்த நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து வெளியே வந்து, 'சுதந்திரத்தின் வாசலில் நின்றுகொண்டு, நான் பட்ட துன்ப துயரங்களையும் என் கோபத்தையும் கசப்புணர்வையும் கைவிடவில்லை என்றால் நான் இன்னும் சிறையிலேயே இருப்பேன். நம்மில் எத்தனை பேர் கோபம், கசப்புணர்வு என்ற சிறைச் சுவர்களுக்குள் அடைபட்டுக் கிடக்கின்றோம்! பழிக்குப் பழி உணர்வு நம்மைப் பலசாலி ஆக்குவதில்லை, மாறாக கசப்புணர்வுள்ளவனாக ஆக்குகின்றது. மன்னிப்போ, பலவீனனாக அல்ல, அது நம்மைச் சுதந்திர மனிதனாக்குகின்றது. உன்னை ஒருபோதும் சிறைப்படுத்தாதே!' என்றாராம். அப்ப அமலன், கோபம் - வெறுப்பு - பகைமை என்ற சிறைச் சுவர்களை அமைத்து அவற்றுக்குள் இருக்க ஆசையா அல்லது சுதந்திர மனிதனாய் சுற்றித் திரிய விருப்பமா?

*(கவி, யாழ்ப்பாணம்)*
**கே: சில மனிதர்கள், மற்றவர்களை மட்டம் தட்டுவதில், தரக்குறைவாகக் கதைப்பதில் வல்லவர்களாகத் திகழ்கின்றார்களே? எப்படி?**
**ப:** கவி, எதுவும் இலகுவான தொன்றல்ல! இதற்கும் ஒருவகையான பயிற்சி, தேர்ச்சி வேண்டும்! இப்படிப்பட்டவர்கள் இத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பதால் அவர்கள் அத்துறையில் பிரகாசிக்கின்றார்கள்!.. அவ்வளவுதான்! இவர்கள் சிகரத்தை ஏறெடுத்துப் பார்க்கக்கூட முடியாத சில்லறைகள்! சலசலவென சத்தத்தை எழுப்ப முடியுமே தவிர சாதனையாளர்களை சரித்துவிட முடியாது!

(யோசப், யாழ்ப்பாணம்)
**கே: எரிபொருட்களின் விலைகளை ஒரேயடியாகக் கூட்டிவிட்டார்களே! இவர்களுக்கு மனசாட்சியே இல்லையா?**
**ப:** யோசப், முதலில் இவர்களுக்கு மனம் இருக்கின்றதா என்று பாருங்கள்! பின்னர், மனசாட்சியைத் தேடிப் பாருங்கள்!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

# அன்பியம் பற்றிய அனுபவப்பகிர்வு

**அருட்பணி யோ.யோ.மவுலிஸ்**

**அன்பிய ஆண்டு**

அன்பியங்கள் எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு 25 வருட நிறைவை முன்னிட்டு நடப்பு ஆண்டை இலங்கைத் திருஅவை அன்பிய ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதையொட்டி யாழ் திருஅவையானது தமது செயற்றிட்டத்தை வருடத் தொடக்கத்தில் முன்வைத்தது. வளவாளர் உருவாக்கம் அன்பியங்கள் அறிமுகம், புத்தூக்கக் கருத்தமர்வு , போட்டி நிகழ்வுகளென தமது திட்டத்தை முன்வைத்தது.

அன்பிய ஆணைக்குழுத் தலைவர், இணைப்பாளர்கள் அக்கட்டத்தில் மிகுந்த நம்பிக்கையோடு காட்சியளித்தார்கள். மீண்டுமாக கடந்த 25 வருடங்களாக அன்பியம் சம்மந்தமான சில செயற்பாடுகள் நடந்ததுண்டு. அது படிப்படியாகச் சோர்வுற்று, செயலிழந்து போனதுண்டு. இதற்குக் காரணமாக போர்கால சூழ்நிலை, சுனாமித் தாக்குதல் போன்ற காரணங்களைக் கூறி எம்மையே சமாதானப்படுத்தியதுண்டு. சில பங்குகளில் பங்குத் தந்தையர்கள் மிகுந்த உற்சாகத்தோடு முன்னெடுத்தாலும் அதற்குரிய ஊக்கப்படுத்தல் இல்லாமை, பங்குப்பணிமாற்றங்கள், மக்களின் பங்களிப்பின்மை போன்ற சில காரணங்களால் அன்பியங்கள் பங்குத்திருஅவையில் நடந்ததற்குரிய தடையங்களே அழிந்துவிட்டன. இவ்வகையான சூழலில் மீண்டும் அன்பிய ஆண்டு பல கேள்விகளைத் தருகிறது.

1. இது சாத்தியமான திட்டமா?
2. ஒவ்வொரு வருடமும் பிரகடனப்படுத்தப்பட்ட திட்டங்கள் போன்று 2021 ஆம் ஆண்டுடன் முடிவடைந்து விடுமா? என்ற கேள்விகளை எழுப்புகிறது.

**கடந்த காலத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது**

கடந்த காலங்களில் பல திருவிழாக்களை, சடங்குகளை நடத்தி முடித்திருக்கிறேன். அவற்றில் சில எவ்விதமான இதய ஒன்றிப்பில்லாத வாழ்வோடு தொடர்பில்லாதவையாக அமைந்ததை உணர்ந்திருக்கின்றேன். திருவிழா முடிந்ததும் திருவிழா நடக்கின்ற பொழுதும் போட்டி பூசல்கள், சண்டை சச்சரவுகள் ஏற்பட அவற்றைத் தீர்ப்பதற்கு நேரத்தை செலவழித்ததுண்டு. எமது கொண்டாட்டங்கள், சடங்குகளில் ஆடம்பர நிகழ்வுகள் இருப்பதை நினைத்து நொந்து கொண்ட நேரங்களும் உண்டு. கடந்த சில மாதங்களாக அன்பியங்கள் மட்டில் நான் காட்டிய ஈடுபாடு, நான் பெற்ற அனுபவங்கள் கடந்த காலத்தில் நான் செய்யத்தவறியவற்றை நினைவூட்டுகிறது. இதற்கு காரணங்கள் கூட சில இருக்கலாம்.

**பேராயப் பங்கில் எனது அனுபவம்**

மறைமாவட்ட அன்பிய ஆண்டினை குழுவின் வழிநடத்தலின் மூலம் அன்பியசெயற்பாடுகளை முன்னெடுக்கத் தொடங்குகினோம்.

முதலில் அன்பியங்களிற்குப் பொறுப்பாக அருட்தந்தை அஜந்தன் நியமிக்கப்பட்டார். மறைமாவட்ட அன்பிய ஊக்குவிப்பாளர் பயிற்சி நடைபெற்று முடிந்ததும் பங்கு இணைப்பாளர்களுக்கான விசேட பயிற்சிகளை வழங்கினோம். அன்பிய அனுபவங்களில் இருப்போர் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். மேற்கொண்டு 20, 25 குடும்பங்கள் இணைந்து அன்பியக் குழுமமாக செயற்பட அன்பிய ஊக்குவிப்பாளர்கள் உதவி செய்தார்கள். ஒரு சில மாதங்களுக்குள்ளே 26 அன்பியங்கள் உருவாகின, தொடக்கத்தில் அன்பிய ஒன்றுகூடல்கள் நடத்துகின்ற போது பங்குத்தந்தையர்கள் அருட்சகோதரர்கள் பிரசன்னமாக இருந்து, ஊக்கமூட்டப்பட்டார்கள், மேலும் சிறப்பாக வழிநடத்துவதற்கு உதவிகளைப்பெற்றுக் கொண்டார்கள். இவர்களூடாக தொடர்பாடலை ஏற்படுத்திக் கூட்டங்கள் நடக்கும் இடம், காலம் என்பவற்றைத் தெரியப்படுத்துவதற்கு viber group ஒன்று உருவாக்கப்பட்டது.

மாதமொரு கூட்டம் வளவாளருக்கென நடைபெற்றுள்ளது. இவர்களுடைய அனுவங்கள் பகிரப்பட்டன. மிகுந்த உற்சாகத்தோடு வளவாளர்கள் காணப்பட்டார்கள். சிலர் சிரமதானங்களை ஆலயத்தில் செய்வதற்குக் கூட முன்வந்தார்கள். அவர்களுக்கிடையே உறவு ஆழப்படுத்தப்பட்டதை உணர்ந்துகொண்டோம். கூட்டங்களை ஒன்றுகூட்டுவதில் ஆர்வமாய் இருந்தார்கள். அன்பியங்களிற்குப் பெயர் சூட்டி புனிதர்களின் பாதுகாப்பில் ஒப்புக் கொடுத்தோம். கொரோனாவின் தீவிர பரவுதலினால் சில ஒன்றுகூடல்களைத் தவிர்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். கொரோனாவின் தாக்கம் அதிகரித்ததனால் எமது அன்பியச் செயற்பாடுகளிலும் மக்களை ஒன்று கூட்டுவதிலும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இருப்பினும் நாம் முகம் கொடுத்த சவால்கள் மத்தியில் சில அன்பியங்களை உருவாக்கிய முயற்சி பல நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் எமக்கும் எமது பங்குக்கும் பெற்றுத் தந்தன. அவற்றில் சில அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அன்பியத்திலுள்ளவர்கள் விவிலியத்தை எடுத்துக் கூட்டங்களுக்கு வருவது இறைவார்தைப் பகுதியை தகுந்த மனநிலையோடு ஆர்வத்தோடு வாசிப்பது தியா-னம் செய்வது தொட்ட வார்த்தைகளை கூச்சமின்றி அயலவர்களோடு பகிர்ந்து கொள்வது தங்களது வாழ்வு நிலைக-ளோடு ஒப்பிட்டு நோக்கி பகிர்ந்தளிப்பதும் பங்கு பற்றுவதும் எமக்கு உற்சாகத்தை அளித்தது. கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றுக்குள்ளே எமது மக்கள் படிப்படியாக வழிநடத்தப்படுகிறார்கள் என்ற நம்பிக்கையை எமக்கு அளித்தது. அன்பிய உருவாக்கமானது சாத்தியமான விடயம்

**மற்றவர்களின் மட்டில் அன்பையும் கரிசனையையும் ஆழப்படுத்தப்படுவதை உணர்ந்தோம்.**

அடிப்படையில் கிறிஸ்தவ வாழ்வு, அன்புறவுவாழ்வு, தமது அயலானை அன்பு செய்வது உதவி செய்து ஏற்றுக்கொண்டு பகிர்ந்து கொண்டு வாழும் வாழ்வு எமது பங்குத்திருஅவையில் இவ்வகையான உறவு வாழ்வைக்காண்பது குறைந்து செல்வதைக் காண்கிறோம். போட்டி மனப்பான்மை பகைமையுணர்வு வெறுப்புக்களைக் கொண்ட சமூகங்களைக் காண்கிறோம். அன்பியங்களில் ஒன்று சேர்பவர்கள் சகோதர உணர்வோடு ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டு செவிமடுத்து உதவி செய்து வாழ முயல்வது இறை-பணி வாழ்வில் எமக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்தன.

உதாரணமாக கொரோனா காலத்தில் மிகவும் வறிய நிலையிலுள்ள சில குடும்பங்களைத் தெரிவு செய்து உலர் உணவு வழங்க வேண்டுமென்று தீர்மானித்து அன்பிய ஊக்குவிப்பாளர்கள் மூலமாக வறுமையிலுள்ளவர்களைத் தெரிவு செய்து தருமாறு கேட்டிருந்தோம். இரு நாட்களுக்குள் அன்பிய உறுப்பினர்கள் ஒன்று கூடி தெரிவு செய்து அனுப்பினார்கள். மூன்றாம் நாள் விநியோகத்தை மேற்கொண்டோம். மக்கள் ஒருவரை ஒருவர் அறிந்திருந்தார்கள். வாழ்க்கை நிலைகளைப்புரிந்து வைத்திருந்தார்கள். விநியோகம் முடிந்ததன் பிற்பாடு ஏதாவது குறைபாடு வருமோ என்று வழமையாக நினைப்பது போல் காத்திருந்தோம். ஆனால் எவ்வித குறையும் கூறவில்லை. எல்லாப்பங்கு மக்களும் அன்பியத்துக்குள் உள்வாங்கப்பட்டால் 'எவ்வளவு நன்றாக இருந்திருக்குமென்று நினைத்ததுண்டு. பணிகளை இலகுவாக்குகிறது.

பங்குகளில் செய்கின்ற பணிகளை அன்பியங்கள் மூலமாக முன்னெடுக்கின்ற போது மிக விரைவில் செய்யக்கூடியதாக இருக்குமென்பதற்கு மேற்கூறிய உதாரணம் பொருத்தமானது. இவ்வகையாக அன்பியங்களை உள்வாங்கிச் செயற்படும் போது திரு அவை பங்களிக்கும் திரு அவையாக பலரை பங்குகளில் செயற்பாடுகளில் பங்காளிகளாக மாற்றுகின்றது. பல புதிய முகங்கள் அன்பியங்களுக்குள் உள்வாங்கப்பட்டு திரு அவையின் பணிகள் முன்னெடுக்கப்படுகிறது. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## காவலன் கலசம்

# வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் மெதுமெதுவாக உருவாகி வருவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது

## வரவேற்கிறார் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் M.V.E.இரவிச்சந்திரன் அடிகளார்

**எட்டு ஆண்டுகளாக யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் அன்பியம் - பொதுநிலையினர் - இளைஞர் ஆணைக் குழுக்களுக்கு இயக்குநராகப் பணியாற்றியுள்ளேன். அக்காலங்களில் பலதடவை மேற்படி குழு உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு கொழும்பு மற்றும் தெற்கின் பல்வேறு பகுதிகளுக்கும் தேசியஆணைக்குழுக் கூட்டங்களுக்கும் சென்றுள்ளேன். அக்கூட்டங்களுக்கு வரும் பெரும்பாலானவர்கள் சிங்கள மக்கள். கூட்டங்கள் பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே நடைபெறும். இங்கிருந்து பெரும் சிரமங்கள் மத்தியில் பயணம் செய்து அங்கு செல்லும் நாம் வெறும் பார்வையாளர்களாக இருந்து விட்டுத் திரும்பிய அனுபவங்களே அநேகம். அப்போதெல்லாம் வடக்குக் கிழக்குக்கென தனி ஆயர் பேரவை உருவானால் எவ்வளவு சிறப்பாக இருக்கும். தமிழில் கூட்டங்களை நடத்தித் திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தலாமேயென இதயம் ஏங்கும். அதற்கான காலம் இப்போது கைகூடி வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி தருகின்றது எனத்தன் எண்ணங்களைப் பகிர்கிறார் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத் துறையின் சிரேஸ்ர விரிவுரையாளர் M.V.E. இரவிச்சந்திரன் அடிகளார்.**



### அடிளார்பற்றி...

M.V.E. இரவிச்சந்திரன் அடிகளார்
1995 ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்று குருநகர் புனித யாகப்பர் ஆலயம் - யாழ் புனித மரியன்னை பேராலயம் ஆகிய பங்குகளில் உதவிப் பங்குத் தந்தையாகவும் - புனித அன்னாள் ஆலயம் பண்டியன்தாழ்வு - அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயம் - சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயம் - நாவாந்துறை புனித மரியன்னை ஆலயம்
- குருநகர் புனித யாகப்பர் ஆலயம்
- புனித ஆசீர்வாதப்பர் ஆலயம் நல்லூர்
- புனித திரேசம்மாள் ஆலயம் றக்கா றோட் ஆகிய பங்குகளில் பங்குப் பணியாற்றியுள்ளார். உரோமை ஊர்பன் பல்கலைககழகத்தில் இறையியல் இளங் கலைமாணி மற்றும் முதுகலைமாணிப் பட்டங்களையும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தத்துவ முதுகலைமாணிப்பட்டத்தையும் பெற்றவர்.

1997ஆம் ஆண்டு முதல் யாழ் பல்கலைக் கழக கிறிஸ்தவ நாகரீகத் துறையின் விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் இவர் தற்போது யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத் துறையின் சிரேஸ்ர விரிவுரையாளராக பணியாற்றி வருகிறார்.
1997ஆம் ஆண்டு முதல் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் 2012ஆம் ஆண்டு முதல் புனித யோசவ் வாஸ் இறையியல் கல்லூரியில் நிரந்தர விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகிறார்.

### வடக்குக் கிழக்கு ஆயர் மன்றம்

இலங்கைத்தீவில்வடக்குக்கிழக்கில்காணப்படும் நான்கு மறைமாவட்டங்களையும் இணைத்த ஒரு ஆயர் மன்றம் உருவாக்கப்பட்டுக் கடந்த சில மாதங்களாக இயங்கி வருகின்றது. இத்தகைய ஆயர்பேரவையின் தேவை மற்றும் நியாயப்பாடு தொடர்பாக காலைக்கதிரின் கிறிஸ்தவ செய்தி இதழ் தொடர் கருத்துக்களை வழங்கி வருகின்றது. அந்த வகையில் இவ்விதழில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

### ஆயர் பேரவை என்றால் என்ன?

கத்தோலிக்க திரு அவையின் இரண்டாம் ஆவியின் திருப்பொழிவு என அழைக்கப்படும் இரண்டாம் வத்திக்கான் சங்கமானது மூன்றாம் மிலேனியத்தில் கத்தோலிக்க திரு அவை பயணிக்க வேண்டிய வழித்தடங்களை திசை காட்டி நின்றது. அந்தச் சங்கம் ஆயர் பேரவை என்றால் என்ன என்பதையும் அதன் நோக்கம் என்ன என்பதையும் பின்வருமாறு கூறுகின்றது.

“ஆயர் பேரவை என்பது ஒருவகைக் குழுவாகும். இக்குழுவின் மூலமாக ஒரு குறிப்பிட்ட நாட்டின் அல்லது நிலப்பரப்பின் ஆயர்கள் தங்கள் அருட்பணியை ஒருங்கிணைந்து செய்கின்றனர். குறிப்பாக, காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ற திருத்தூதுப் பணி முறைகள், திட்டங்கள் வழியாகத் திருச்சபை மக்களுக்கு வழங்கும் மேலான நலன்களைப் பெருக்குவதே இப்பேரவையின் நோக்கமாகும்.” (ஆயர்களின் அருட்பணி எண். 38)

“மக்களின் அருள்வாழ்வு நலனைப் பேண மறை மாவட்டங்களுக்கு மட்டுமல்ல, மறைமாநிலங்களுக்கும் ஏற்ற எல்லைகள் தேவைப்படுகின்றன. உண்மையில் இது மறை மண்டலங்களை ஏற்படுத்தவும் தூண்டுதல் அளிக்கிறது. இங்ஙனம் சமூக, இட சூழ்நிலைகளுக்கேற்பத் திருத்தூதுப் பணித்தேவைகளைச் சிறந்த முறையில் நிறைவேற்ற இயலும்.” (ஆயர்களின் அருட்பணி எண். 39)

இச்சங்கத்தின் பின் உருவாக்கப்பட்ட திரு அவையின் சட்டக் கோவை பின்வருமாறு விளக்குகின்றது.

“ஆயர் பேரவை என்பது நிரந்தரமான ஓர் அமைப்பாகும் அது ஒரு நாட்டின் அல்லது ஒரு குறிப்பிட்ட எல்லையின் ஆயர்கள் குழுவாகும் இதன் மூலம் ஆயர்கள் தங்கள் எல்லையைச் சார்ந்த கிறிஸ்தவ விசுவாசிகளுக்காகச் சில மேய்ப்புப் பணிகளை ஒருங்கிணைத்து செயலாற்றுகின்றனர் காலம் மற்றும் இடத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ற திருத்தூதுப் பணி முறைகள், திட்டங்கள் வழியாக, சட்டத்தின் விதி முறைக்கேற்பத்திருச்சபைமக்களுக்குவழங்கும்மேலான நலன்களை மேம்படுத்துவதே இப்பேரவையின் நோக்கமாகும்.” (திரு அவைச் சட்டக் கோவை எண் 447)

*கத்தோலிக்க திரு அவையின் மேற்படி அதி உயர் ஆவணங்கள் சுட்டிக்காட்டுவது மிகத் தெளிவானது. ஒரு ஆயர் பேரவை எனப்படுவது:*

*குறிப்பிட்ட எல்லையைச் சார்ந்த ஆயர்கள் காலம் மற்றும் இடத்தின் சூழ்நிலைக்கேற்பதம் எல்லையைச் சார்ந்த மக்களுக்கானபணிகளை முன்னெடுக்க திட்டங்களை உருவாக்கி முன்னெடுக்கும் ஒரு நிலையான அமைப்பாகும்.*

இதன் அடிப்படையில் இலங்கைத்தீவின் வடக்குக் கிழக்கு பகுதியானது தமக்கென ஒரு ஆயர் பேரவையை உருவாக்கி வழிநடப்பதற்கான சகல தேவைகளையும் நியாயப்பாடுகளையும் கொண்டுள்ளது.

### தமிழில் கூட்டங்களை நடத்தித் திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தலாமேயென இதயம் ஏங்கிய அனுபவம்

எட்டு ஆண்டுகளாக யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் அன்பியம், பொதுநிலையினர், இளைஞர் ஆணைக்குழுக்களுக்கு இயக்குநராகப் பணியாற்றியுள்ளேன். அக்காலங்களில் பலதடவை மேற்படி குழு உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு கொழும்பு மற்றும் தெற்கின் பல்வேறு பகுதிகளுக்கும் தேசிய ஆணைக் குழுக் கூட்டங்களுக்கும் சென்றுள்ளேன். அக்கூட்டங்களுக்கு வரும் பெரும்பாலானவர்கள் சிங்கள மக்கள். கூட்டங்கள் பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே நடைபெறும். இங்கிருந்து பெரும் சிரமங்கள் மத்தியில் பயணம் செய்து அங்கு செல்லும் நாம் வெறும் பார்வையாளர்களாக இருந்துவிட்டுத் திரும்பிய அனுபவங்களே அநேகம். அப்போதெல்லாம் வடக்குக் கிழக்குக்கென தனி ஆயர் பேரவை உருவானால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் தமிழில் கூட்டங்களை நடத்தித் திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தலாமேயென இதயம் ஏங்கும். அதற்கான காலம் இப்போது கைகூடி வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி தருகின்றது.

### வடக்குப் கிழக்கு ஆயர் மன்றத்தின் முன்னெடுப்புக்கள்

முன்னோடி அமைப்பாக செயற்படும் வடக்குப் கிழக்கு ஆயர் மன்றம் தனது முதலாவது பகிரங்க வெளிப்படுத்தலாக மே 18 இல் தமிழ் மக்கள் போரில் இறந்த தங்களது உறவுகளை நினைவு கூருவதற்கான உரிமைக்குக் குரல் கொடுத்து இறுதிப் போரில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்பதை வலியுறுத்தியமை பெரும் நம்பிக்கையைத் தந்தது. தொடர்ந்து அவர்கள் அமைதிக்கான ஆய்வு நிலையம் ஒன்றை அமைக்க முன்வந்திருப்பதும் வரவேற்கதக்கது. உண்மை அமைதி நீதியிலேதான் கட்டப்பட முடியும் ஆகவே மேற்படி ஆய்வு நிலையம் நீதிவழியான உண்மைக்கு உழைக்கும் என்பது எமது எதிர்பார்ப்பு.

### செய்யக் கூடியவை

- மறைமாவட்ட ஆணக்குழுக்களிடையே அதிகரித்த ஒத்துழைப்பை உருவாக்கல்
- இணைந்த செயற்திட்டங்களை முன்னெடுத்தல்
- நிரந்தர செயற்பாட்டு மையமொன்றைப் பொதுவான பொருத்தமான இடத்தில் உருவாக்கல்
- பொதுவான வழிபாட்டுப் பாடல் புத்தகங்களை உருவாக்கல்
- மறையறிவு போட்டிகள் பரீட்சைகளை பொதுவாக நடாத்துதல்
- பண்பாட்டு வடிவங்களைப் பரிமாறிக் கொள்ளுதல்
- வளங்களை குறிப்பாக மனித வளங்களைப் பரிமாறிக் கொள்ளுதல்

ஒரு மொழி பேசும் ஒரே பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு பல விடயங்களில் இணைந்து செயற்பட்டுப் பயன்பெறலாம்.

வடக்குக் கிழக்கு ஆயர் பேரவையை நோக்கிய பயணம் உறுதியானதாகவும் நிலைபேறானதாகவும் அமையட்டும்.

## காவலன் கலசம்

# அடையாளம்



# ஓர் உளவள ஆன்மீகப் பார்வை

கரைவையூர்ச் செல்வம்

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

**அடையாளம் அன்றேல் அடையாளக் குழப்பம்**

உளவள வழி நின்று பார்க்கும் பொழுது அடையாளம் என்ற சொல் எறிக் எறிக்ஷன் (Erik Erikson) அவர்களாலேயே 1950களில் துவக்கப்பட்டது. மனித படிமுறை வளர்ச்சி (Development growth) அதுவும் உளவள சமூகப் படிமுறை வளர்ச்சி பற்றியும் (Psycho Social development) பரவலாக ஆய்வு செய்து எரிக்ஷன் எழுதினார். இந்த மனித உளவள சமூகப் படிமுறை வளர்ச்சியை எறிக்ஷன் எட்டுப் பருவப் படிமுறைகளாக வகுத்தார். பின்னர் பல மக்கள் எண்பதுகளுக்கு மேல் வாழ்ந்தமையினாலும் அவரது மனைவியும், அவருமே எண்பதுக்கு மேல் வாழ்ந்தமையினாலும் அந்தப் பருவத்தையும் இணைத்து ஒன்பதாக்கினார்.

இந்த ஒன்பது பருவங்களுள் ஐந்தாவது பருவத்தை வாலிபப் பருவம் என்று எறிக்ஷன் அழைத்தார். வயதை 12 தொட்டு 20 அன்றேல் 25 என்று நிர்ணயித்தார். ஏன் 20 அல்லது 25 என்று எறிக்ஷன் குறிப்பிட்டார். அவரது ஆய்வின்படி ஆசிய நாடுகளில் வாலிபப் பருவம் பெரும்பாலும் 25 வயது மட்டாக நீடிக்கிறது என்று கருத்துச் சொன்னார். இதை அவர் ஒரு Moratorium Period அதாவது காலந் தாழ்த்திய நிலை என்றும் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு வாழ்க்கைப் பருவத்துக்கும், அந்தப் பருவத்துக்கு எற்ப ஒரு பருவப்பலனையும் (Development task) அவர் கோடிட்டுக்காட்டினார். எங்களுடைய இந்த அடையாளம் என்ற ஆய்வுரைக்கு இப்பருவம் முக்கியமானது. இந்தப் பருவத்துப் பலனை எறிக்ஷன் அடையாளம் அன்றேல் அடையாளக் குழப்பம் என்று பெயரிட்டார்.

இந்தப் பருவத்தினர் தாம் கடந்து வந்த பள்ளிப் பருவத்தைத் தங்களுடன் இணைக்க மாட்டார்கள். அப்பருவத்தைக் கடந்து விட்டோமென்ற ஒரு நினைப்பு அடுத்த பருவமான இளம் வயதுடையோருடன் (young adulthood) இணைக்க சமூகம் இடமளிக்காது. ஆகவே இப்பருவத்தினர் இடைப்பட்ட காலத்தினுள் வாழ வேண்டிய நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இடைக்காலம் (transition time) எந்த நிலையிலும் ஒரு கடினமான காலம். இந்தப் பருவத்தினரின் குழப்பம் "நான் யார்?" இந்த இடைக்காலம் (transition time) ஒரு நிச்சயமற்ற நிலையை உருவாக்குகின்றது. பல நாடுகளில் சில சட்டங்கள் உண்டு. 18 வயது வரை புகைக்க முடியாது, மது அருந்த முடியாது, அரசியல் தேர்தலில் வாக்களிக்க முடியாது, வாகனங்கள் ஓட்ட அனுமதி கிடையாது, சில வருடங்களுக்கு முன்னர் நான் தமிழ்நாடு சென்ற பொழுது, அங்குள்ள ஓட்டோக்களின் பின் கண்ணாடியில் எழுதப்பட்டிருந்த வசனம் எனது கவனத்தை ஈர்த்தது "பெண்ணின் திருமண வயது 21" என்பது தான் அந்த வாசகம்.

இந்தத் தடைகளுக்குப் பின்னணியில் சமூகம் என்ன சொல்ல விரும்புகின்றது. வாலிப பருவம் ஒரு நிச்சயமற்ற, குழப்பமான பருவமாய் இருப்பதால் அவர்களால் பொறுப்புடன் நடந்து கொள்ளும் பக்குவம் இல்லை.

இந்தக் குழப்பம் எதனால் ஏற்படுகின்றது? நான் ஏற்கனவே கூறியது போல 1. இப்பருவத்தினர் ஓர் இடைக்காலத்தில் வாழ்வதினால் இந்த இடைக்காலத்துக்கே உரிய நிச்சயமற்ற தன்மையினால் ஏற்படும் குழப்பம் ஒன்று. அடுத்ததாக இந்த வாலிபப் பருவத்தில் ஆணுக்கும் பெண்ணிற்கும் உடல் வளர்ச்சி ஏற்படுகின்றது. இவர்கள் உடலில் உள்ள குருதியில் கலந்து உறுப்புக்கள் செயற்படத்தூண்டும் உட்சுரப்பு நீர்வகைகளில் ஒன்றான hormone வளர்கின்றது. இதை hormonal development என்றழைப்பர்கள். பாலியல் ரீதியாக அதாவது Sexval hormones வளருகின்றன. இது ஒரு யதார்த்த இயல்பான ஒன்று.

இந்த hormone வளர்ச்சியினால் உணர்வுகளும் பாதிக்கப்படுகின்றன. இவர்களுடைய பெருங்கேள்வி " நான் யார்?" "எனக்கு என்ன நடக்கின்றது?" வாலிப வயதுடைய ஆண் வாலிபர்கள் கேட்கிறார்கள். ஏன் நான் பெண்களால் ஈர்க்கப்படுகின்றேன்? பெண் யுவதிகளும் அதே கேள்வியைக் கேட்கின்றார்கள். "ஏன் நான் ஆண்களினால் ஈர்க்கப்படுகின்றேன்?" இந்தக் கேள்விகளை இந்த வாலிபர்கள் உரக்கக் கேட்பதில்லை. ஆனால் இவை அவர்கள் மனத்தைக் குழப்புகின்றன. அந்த பாலின ஈர்ப்பை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. துரதிஷ்டவசமாக பெற்றோர், ஆசிரியர்கள், ஆசிரியைகள் இந்தக் குழப்பத்தைப் பற்றி தங்கள் பிள்ளைகளுடனோ, மாணவரிடமோ கலந்துரையாடுவதில்லை. முரணாக இந்த உணர்வுகளை அடக்க வேண்டுமென்ற தடைகள் பல விதிக்கப்படுகின்றன. "இது பருவக் குழப்பம்" என்று சொல்லித் தட்டிக் கழித்து விடுகின்றனர். இந்தப் பாலினக் குழப்பத்தை பக்குவமாகவும், கண்ணியத்துடனும் எடுத்துரைக்கும் அறிவோ, ஆற்றலோ பெற்றோருக்கும் ஆசிரிய, ஆசிரியைகளுக்கும் இல்லையென்பது கவலைக்குரியது. அதுவும் இந்த 21ம் நூற்றாண்டிலும் இல்லையென்பது மிகவும் கவலைக்குரியது. இந்த அடக்குதலும் தட்டிக் கழித்தலும் அவர்களுடைய உணர்வுகளையும் குழப்பங்களையும் கூட்டுமே ஒழிய குறைக்காது. தங்களை யாரென்று அடையாளப்படுத்த முடியாமையினாலேயே அவர்கள் குழம்புகிறார்கள். உளவள ரீதியாக இந்த வாலிபப் பருவத்தில் இளைஞர்கள் தங்களுக்கென்று ஓர் அடையாளத்தை உறுதிப்படுத்துவது அவசியம். இல்லையெனில், அவர்கள் குழம்பிய நிலையில் தங்கள் கல்வியைக் குழப்புவார்கள், தொழில் செய்வது உறுதியாக ஒன்றில் காலூன்றாமல் தத்தளிப்பார்கள். பாலியல் வாழ்விலும் ஒரு புரியாத நிலையில் பாலியல் சக்தியல் வீட்டை விட்டு ஓடி, பிள்ளையை பெத்து விட்டு, பிரிந்து வாழ்வது மட்டுமல்ல, அந்தப் பிள்ளையைக் கொலை செய்வார்கள், அன்றேல் அனாதை மடத்தில் விட்டு விட்டு தங்கள் வாழ்க்கையை சீரழித்துக் கொள்வார்கள். பருவ வளர்ச்சி அடையாத நிலையில் கர்ப்பம் தரித்துக் கஸ்டப்படும் இளையோர் பலர் (teenage pregnancy) என்ற தலைப்பில் நாடுகளில் நிறைய விவாதித்துள்ளார்கள். ஆய்வு செய்துள்ளார்கள். கவிஞர் கண்ணதாசன் எழுதிய பாட்டொன்று ஞாபகம் வருகின்றது. "நான் பிறந்த காரணத்தை நானே அறியு முன்னர் நீயும் வந்து பிறந்தாயே." இந்த வரிகளை அடையாளத்தை வைத்துப் பார்ப்போமானால், இப்படிக் கூறலாம். "எனது அடையாளத்தை நானே காணு- முன் வந்து பிறந்தாயே!" ஆகவே உமது அடையாளம் என்னவாகும்?

**அடையாளமும் அர்ப்பணமும்**

எனது உளவள சமூக அடையாளத்தைக் கண்டு, அந்த அடையாளத்தில் நான் ஊன்றாவிடின், எனது வாழ்ககை அர்ப்பணங்கள் திருமணமானாலும் சரி, துறவறமானாலும் சரி, குருத்துவமானாலும் சரி .. பின்னர் வளர்ந்து வரும் காலத்தில் பல்வேறு பிரச்சினைகளை உதாரணமாக மனித உறவுப் பிரச்சினைகள் ஒருவரையொருவர் எதிரிகளாகப் பார்க்கும், பிரச்சினைகள், முழுமையாக என்னைக் கொடுக்க முடியாத பிரச்சினைகள் பாலியல் பிரச்சினைகள் தோன்றவே செய்யும்.

திருமணத்தில் ஒருவரை ஒருவருக்குக் கொடுப்பது கடினமாகும். இவர்களுடைய பிரச்சினை என்ன? என்னை முழுமையாக உனக்குத் தந்து விட்டால் எனக்கென்று இருப்பது என்ன? ஆகவே என்னைக் கொடுக்கப்பயம் ஆழமாய்ப் பார்க்கும் பொழுது இது எனது அடையாளப் பிரச்சினை ஒரு தீர்க்கமான உறுதியான அடையாளம் எனக்கில்லாத பயம். ஒரு அகப் பாதுகாப்பற்ற பயம். ஆன்மீக வாழ்வில் சரணடைவது கடினம். மேற்கூறிய அதே காரணந்தான் சரணடைவதற்கும் ஒரு தடையாக இருக்கும். நான் இங்கு குறிப்பிடுவதெல்லாம் ஓர் உளவள சமூக அடையாளம். ஆகவே அர்ப்பண வாழ்விலும் அர்ப்பணிக்க முடியாத பிரச்சினை இந்தப் பிரச்சினை எனது அடையாளப் பிரச்சினை.

எறிக் எறிக்ஷன் எடுத்துரைத்த அடையாளம் அன்றேல் அடையாளக் குழப்பம் என்ற பருவத்தின் பின்னர் வரும் பருவந்தான் வளர்ந்த இளமைப் பருவம் (Young adulthood) இந்த ஆறாவது பருவத்தின் பயன் அந்நியோன்னியம் அண்மைக் காலத்தில் ஒரு புதிய குழப்பம் உலகெங்கும் மக்களிடையே நிலவுவதை இவ்விடத்தே குறிப்பிடத்தான் வேண்டும். அதாவது, சிலரில் ஆண்கள் - ஆண்கள் பால் ஈர்க்கப்படுகிறார்கள். பெண்கள் - பெண்கள் பால் ஈர்க்கப்படுகிறார்கள். இதை ஓரினச் சேர்க்கையென்று அழைப்பதுண்டு. இதையிட்டு வேறோர் கட்டுரையில் ஆராய்வோம். இதுவும் ஓர் அடையாளப் பிரச்சினையாகக் கருதலாம். அன்றேல் தனிமைப்படுத்தல். ஓர் அந்நியோன்னியத்தில் உறவை வளர்க்க, அந்த அந்நியோன்னியத்தில் நிலைக்க உளவள சமூக அடையாளம் வலுவாக இருக்க வேண்டும். அன்றேல் என்னை உனக்கு முழுமையாகத் தந்து விட்டால் எனக்கென்ன மிச்சமாக உண்டு என்றவொரு பயத்தால் பெரும்பான்மையினர் அந்நியோன்னியத்தை வெறுக்கிறார்கள். ஆயினும் எறிக் வுறொம் என்ற ஜேர்மன் நாட்டு உளவியலாளரின் கருத்துப்படி மனிதருக்கு அந்நியோன்னிய உறவு ஓர் அவசிய தேவை. இது ஒரு மனித தேவை.

ஒரு பக்கத்தில் அந்நியோன்னிய உறவு ஒரு மனித தேவை அதேவேளை அந்நியோன்னியத்திற்கு ஒரு பயம். அந்நியோன்னிய உறவுடன் பாலியல் உறவுடன் - பாலியல் புணர்ச்சியுடன் சமன்படுத்தக் கூடாது. இரண்டும் ஒன்றாக இருக்கலாம், ஒன்றின்றி ஒன்றிருக்கலாம். இதில் ஒரு தெளிவான சிந்தனை மிகத் தேவை. இன்றும் இதைக் குழப்புபவர்கள் உள்ளார்கள். இதனால் உறவுப் பிரச்சினைகள் ஏற்படலாம். நிறைய ஏற்படுகின்றன.

**ஒரு மாறுபட்ட குரல்**

இந்தக் கட்டத்தில் வட அமெரிக்காவில் மிகவும் சிறப்புடைய கள்வட்ட பல்கலைக்கழகப் பேராசிரியையான கறல் கிலிகன் தனது பரவலான ஆய்வை வைத்து ஒரு புறம்பான கருத்தை முன்வைத்தார். அதாவது பெண்களைப் பொறுத்த மட்டில், அவர்களுக்கு உறவு தான் முக்கியம். அடையாளமல்ல. அதாவது, உறவைக் கொடுத்தே அவர்கள் அடையாளம் தேடுகிறார்கள். ஆகவே, எறிக் எறிக்ஷனின் ஆறாவது பராயத்தை ஐந்தாவது பராயமாக்கி ஐந்தாவது பராயத்தை பெண்களுக்கு ஆறாக்கி விட்டார் கறல் கிலிகன் இவருடைய கருத்தை உளவியளார் இதுவரை முரண்படுத்தியதாகத் தெரியவில்லை.

நடைமுறையில் பார்க்கும் பொழுது கறல் கி- லிகிள் அவர்கள் முன்வைத்த கருத்து பயனுள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும் இருக்கின்றது. உதாரணமாக ஓர் ஆண் தனது பாலுணர்வுப் புணர்ச்சித் தேவைக்காக ஒரு பெண்ணுடன் உறவை வளர்க்கிறான். அவனது பாலுணர்வுத் தேவை நிறைவு கண்ட பொழுது, அந்தப் பெண்ணுடன் உறவை வளர்ப்பதில் அவனுக்கு அவ்வளவாக ஈடுபாடில்லை. முரணாக ஒரு பெண் தன்னுடைய உறவுத் தேவையை சந்திக்க, ஆணுடன் பாலுறவு கொள்ள முற்படுவதைப் பார்க்கின்றோம். பின்னர் அவளுடைய உறவுத் தேவை கிஞ்சித்தும் நிறைவேறாமல் நடுத்தெருவில் கைவிட்ட நிலையில் விரக்தியோடும் வெறுப்போடும் வாழும் பெண்கள் நிறையவே உண்டு. இதனால் தற்கொலை செய்த பெண்களும் உண்டு. ஓர் ஆணுடைய உளவியல் தன்மைகளும், ஓர் பெண்ணுடைய உளவியல் தன்மைகளும் வேறுபட்டவை என்ற அறிவு பெரும்பான்மையான மக்களுக்குத் தெரிவதில்லை. இதனாலும் மனித உறவுப் பிரச்சினைகள் நிறையவே உண்டு. வேறுபட்ட உளவியல் தன்மைகளைப் புரியும் பொழுது உறவுப் பிரச்சினைகளாகப் புரிகின்றன.

**கலப்புத் திருமணம்**

இதை மறு இதழில் பிரசுரிப்பது நன்றென நான் கருதுகின்றேன். இந்தக் கட்டுரையை நான் தமிழில் நிகழ்த்துவதால் எங்கள் மாறி வரும் தமிழ்ச் சமூகத்தைப் பற்றியும் அடையாளத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டி உள்ளது. பொதுவாகப் பார்த்தால் எங்கள் தமிழ் சமூகம் பாரம்பரியமாக ஒரு பிற்போக்குத் தன்மை கொண்டது. பாரம்பரியங்களுக்குக் கட்டுப்பட்டிருந்தது. ஒரு மூடிய அமைப்பாகவும் இருந்தது. (அடுத்த இதழில் தொடரும்..)

## காவலன் கலசம்

# கொவிட் காலத்தில் வெளிவந்த இரண்டு நூல்கள்

**‘கொவிட் 19’ காலமானது இயல்பு வாழ்வை பெருமளவில் பாதித்திருப்பினும் பல்வேறு படைப்பாக்க முயற்சிகள் குறிப்பாக நூலுருவாக்கங்கள் இக்காலத்திலும் மேற்கொள்ளப்படுகின்றன. இக்காலத்தில் வெளிவந்த இரண்டு நூல்களைப் பற்றிய அறிமுகத்தினை இன்றைய கலைக் காவலன் மேற்கொள்ளுகின்றது.**




## எழுத்தில் வடித்த எண்ணங்கள்


அருட்சகோதரி மேரி தஸ்நெவிஸ் லடிஸ்லாஸ் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் எழுதிய பல கட்டுரைகளின் தொகுப்பாக ‘எழுத்தில் வடித்த எண்ணங்கள்’ என்ற நூல் வெளி வந்துள்ளது. அருட்சகோதரி மேரி தஸ்நெவிஸ் லடிஸ்லாஸ அவர்கள் அர்ப்பணிப்பு மிக்க திருக்குடும்ப கன்னியர் சபைத் துறவி. ஆற்றலும் ஆளுமையும் ஆன்மீகத் தெளிவும் ஒருங்கே கொண்ட படைப்பாளி. ஆசிரியராக அதிபராக சமூகப் பணியாளராக திருக்குடும்ப சபையின் கண்ணியம் மிக்க துறவியாக வாழ்ந்து கொண்டிருப்பவர். தனது நிர்வாகத் திறமையினால் பாடசாலைகளைச் சிறப்பாக வழி நடத்தியவர் மிகப்பெரிய மாணவ சமூகத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் தனது அறிவு அனுபவம் என்பவற்றை சமூகத்திற்கு இயன்றளவில் வழங்கி வருபவர். அவரது ஆழ்ந்த அறிவினதும் அனுபவத்தினதும் வெளிப்பாடாக அமைந்த ஆக்கங்களைத் தாங்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது.

இருபது கட்டுரைகளைத் தாங்கியதாக 200 பக்கங்களில் வெளிவந்துள்ள இந்நூலில் திருக்குடும்ப சபை சார்ந்த மூன்று கட்டுரைகளும், ஆன்மீகம் சாரந்த 10 கட்டுரைகளும் கல்வியில் சார்ந்து ஏழு கட்டுரைகளும் இடம்பெறுகின்றன. திருக்குடும்ப கன்னியர்கள் சபைசார்ந்த வகையில் 200ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சகோதரிகள் என்ற கட்டுரை திருக்குடும்ப துறவிகளின் பணிவாழ்வையும் எதிர்கால சவால்களையும் அலசுகின்றது. அவ்வாறே இயேசுவின் பிரசன்னமும் ஆசீர்வாதமும் என்ற கட்டுரை நற்கருணையில் தோன்றிய இயேசுவின் உருவமும் ஆசீரும் எந்தளவுக்கு முக்கியத்துவம் பெற்றதென்பதனை வலியுறுத்துகின்றது. அவ்வாறே ‘திருக்குடும்ப சபையின் அருங்கொடையும் ஆன்மீகமும்’ என்ற கட்டுரை சபையின் முக்கியத்துவங்கள் அதன் ஆன்மீகக் கொள்கைகள், என்பவற்றை இன்றைய 21ஆம் நூற்றாண்டின் சவால்களுடன் இணைந்து நோக்குகின்றது.

அவரத ஆன்மீகம் சார்ந்த கட்டுரைகளில் ‘இளையோரின் ஆன்மீகம்’ என்ற கட்டுரை தொடக்கம் ‘விண்ணும் மண்ணும் சந்திந்த நாளில்’ என்ற கட்டுரை வரையில் பல்வேறு ஆனமீகம் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்துகின்றன. பாப்பரசரின் சுற்றுச் சூழல் தொடர்பான மடல் மேய்ப்புப் பணிமாநாடு பற்றிய பார்வை போன்றவை சமகாலத்தில் நின்று ஆன்மீகம் தொடர்பான புதிய சிந்தனைகளைத் தருகின்றன அதனைவிட ‘தூய பவுல்’ ‘தூய ஆவியானவர்’, ‘ஆண்டவரே எங்களோடு தங்கும்’ ‘கிறிஸ்துவை நெருக்கமாகப் பின்பற்றும் துறவற வாழ்வு’ போன்ற கட்டுரைகள் ஆன்மீகம் சார்ந்த முக்கியமான கட்டுரைகளாக உள்ளன. ஆனால் ‘மிருசுவில்லா அது என் உள்ளத்தை கொள்ளை கொண்ட பணித்தளம்’ ‘மணற் காட்டில் என் அனுபவப் பகிர்வுகள்’ என்ற கட்டுரைகள் அவரது பணிவாழ்வில் போர்க்காலத்தில் அவர் எதிர் கொண்ட சவால்கள் மற்றும் இறை அனுபவங்களைப்பற்றி பேசுகின்றன. அவர் ஆசிரியராக அதிபராகப் பணியாற்றிய அனுபவங்களூடாக அவர் எழுதிய கல்வியில் சார்ந்த கட்டுரைகளில் ‘இன்றைய மாணவரில் போர் ஏற்படுத்திய தாக்கம்’ என்ற கட்டுரை மிகமுக்கியமான ஆய்வாகும் அதுமட்டுமன்றி ‘கல்வி என்பது பார்வை உள்ளவர்களை ஒளியின் பால் அழைத்துச் செல்வதாகும்’ என்ற கட்டுரை இன்றைய கல்விச் சவால்களை எடுத்தியம்புபவை. இறுதியாக அவர் எழுதிய கட்டுரையானது ‘சுதந்திரத்துக்குப்பிந்திய யாழ்பாண மாவட்டத்தின் கல்வி நிலை மாற்றங்களும் சமூக அசைவியக்கங்களும் (1948-2002)’ என்ற கட்டுரையானது கல்வியலாளருக்கு மிகவும் அவசியமான கட்டுரையாகும். அவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட கல்வியியல் முது தத்துவமாணி (M.Pil) கற்கைக்கெனச் சமர்ப்பித்த ஆய்வின் ஒரு பகுதியாக அமைந்த இந்தக்கட்டுரை சுதந்திரத்திற்குப்பின் யாழ்மாவட்டத்தின் சமய பண்பாட்டுச்சூழல், கல்வி நிலை, சீர்திருத்தங்கள், சமூக அசைவியக்கம், எமது சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கின்ற தாக்கங்கள், தாக்கமின்மைகள் பற்றி மிகச் சிறப்பாக அலசுகின்றது.

இந்நூலைப்பற்றி வாழ்த்துரையில் கூறியுள்ள கலாநிதி திருநாவுக்கரசு அவர்கள் “அவசரப்படாமல் ஆழமான சிந்தனையுடன் நின்று நிதானித்து எழுதப்பட்ட இக்கட்டுரைகளின் தொகுதியாகிய நூல் பொதுமக்களிடையேயும் கல்வியலாளர்களிடையேயும் மாணவர் களிடையேயும் கட்டாயம் பேசப்படும்” என்று எழுதியுள்ளார். முன்னுரை எழுதிய அருட்திரு ஜீவேந்திராபோல் அவர்கள் “அவரது கட்டுரைகள் இளையோர் மட்டில் அதிக கவனத்தினை ஈர்த்துள்ளது என்றும் அவை இளைய சமுதாயத்தின் எழுச்சிக்கும் உருவாக்கத்திற்கும் வழிகாட்டுபவையாக அமைந்துள்ளதாக” குறிப்பிடுகின்றார்.

திருக்குடும்ப கன்னியர் சபையின் வெளியீடாக அமைந்துள்ள இந்நூல் எடுத்த விடயங்களை சிறப்பாகக் கையாண்டதாக மட்டுமன்றி எடுத்துக்காட்டான கட்டுரை அமைப்புகளுடனும், சிறப்பான மொழிச்சிறப்புடனும் எளிமையும் சிறப்பும் வாய்ந்தவையாக அமையப் பெற்ற மிகமுக்கியமான படைப்பாகும்.



## கொரோனா ஊரடங்கு: நானும் என் நாய்களும்

கொவிட் 19 முடக்க காலம் ஒரு இருண்ட காலமென்று அழைக்கப்பட்டாலும் ஒவ்வொரு மனிதர்களும் தம்மையே தாம் மீள் விமர்சனம் செய்கின்ற முக்கியமான காலமாகும். இக்காலத்தினை அடிப்படையாகக் கொண்டு பல கவிதைகள், சிறுகதைகள் கட்டுரைகள், சினிமா என பலவும் வெளிடப்பட்டுள்ளன. எந்தக் காலத்தை விடவும் இக்காலத்தில் சமூக வலைத்தளங்கள் மனித வெறுமையைப் போக்குகின்ற ஊடகங்களாக செயற்பட்டு வந்துள்ளன. அத்தகைய முயற்சிகளில் ஒன்றாக அருட்பணி அன்புராசா அடிகள் இந்த லொக்டவுண் காலத்தில் முகநூல் உட்பட சமூகவலைத் தளங்களில் எழுதிய 80 சம்பவச் சித்திரிப்புக்களை தாங்கிய நூலாக வேறுபட்ட வடிவத்தில் அமைந்த ஒரு நூலாக இந்நூல் வெளிவந்துள்ளது.

அமலமரித் தியாகியாகிய அருட்தந்தை செ.அன்புராசா அடிகள் ஆன்மீகப் பணிகளைச் சிறப்பாக ஆற்றிவருபவர். அதேவேளை கலை இலக்கியப் புலத்திலும் ஓயாது தொடர்ச்சியாக எழுதி வருபவர். இதுவரை இருபத்தியொரு நூல்களை வெளியிட்டிருப்பவர். அவர் எங்கெல்லொம் பணியாற்றினாரோ அவற்றின் அனுபவங்களை ஏதோ ஒரு வடிவத்தில் எழுதிப் பதிவிட்டவர். குறிப்பாக அவரது யுத்தகால வைத்தியசாலை அனுபவங்களும், சுனாமிப்பேரலை நினைவுகளும் மிக முக்கிய மான பதிவுகளாக உள்ளன. கலை, இலக்கியம், சமூகவியல், சிறுவர் இலக்கியம், நாடகம். என்ற பல துறை சார்ந்தாக அவரது எழுத்துக்கள் அமைந்திருப்பினும் அவர் எழுதுகின்ற சமூக விமர்சனங்கள் மனித மனச்சாட்சியை ஓங்கி அறைந்து அதிர்வுக்குள்ளாக்கி சிந்திக்க அழைக்கின்றவை. அவை காலத்தின் கண்ணாடிகளாக அமைந்துவிடுபவை. அந்த வகையில் புதிய வடிவில் அமைந்துள்ள ‘கொரோன ஊரடங்கு: நானும் என் நாய்களும்’ என்ற நூல் அனைவரும் வாசிக்க வேண்டி மிக முக்கியமான நூலாகும்..

லொக்கடவுண் காலத்தில் ஒருவர் தனது நாய்களுடன் உரையாடுவதாக அமையும் இந்த ஆக்கங்கள் அனைத்துக்குள்ளும் புரையோடிப் போயுள்ள மானிட வாழ்வை விமர்சனம் செய்யும் ஆழமான கருத்து நிலைகள் அலசப்படுகின்றன. போலி மனித வாழ்வினை நாய்களைக் கொண்டு விமர்சனம் செய்யும் அழகான உருவக அமைப்பு இதற்குள் காணப்படுகின்றது. இதனை என்ன வடிவம் எனக்கூற முடியாது. இதனை முன்னுரையில் திரு கருணாகரன் அவர்கள் “இதை கதை நூலாகக் கொள்வதா அல்லது நாவலென வாசிக்கலாமா அல்லது கதைகளின் தொகுதியா இல்லை இது ஒரு விவரணச்சித்திரமா அல்லது உள்ளே நிகழ்த்தப்படும் சமூகவியல் ஆய்வா? சமகால விமர்சனமா என்ற கேள்விகள் உங்களுக்கு எழலாம்” என்று கூறும் அவர் “நீங்கள் இதனை எதாகவும் எடுத்துக் கொள்ளலாம். அந்தளவுக்கு நெகிழ்ச்சியுள்ள பிரதியாக வடிவமாக இது உள்ளது” என்கின்றார்.

“அடிக்கடி வெளியே போய் வருவாய் ரண்டு மூண்டு நாளாய் வெளியில ஆளையே காணம் வீட்டுக்குள்ள அடைபட்டுக் கிடக்கிறாய் என்ன சங்கதி” என என் வீட்டுத் தோழன் றெமி என்னைபபார்த்துக் கேட்டது என ஆரம்பிக்கின்ற ஆசிரியர் றெமி, றீனா என்ற தனது செல்லப் பிராணிகளான நாய் நண்பர்களுடனான உரையாடல் முறைக்கூடாக இப்படைப்பினை வளர்த்துச் செல்லுகின்றார். விலங்குகளுடன் மனிதரை ஒப்பிடுவது முதல் நாய்களைச் சந்திக்கின்ற அந்த மனிதனுக்கூடாக ஆசிரியர் அருட்தந்தை அவர்கள் பல விடயங்களைப் பகிர்ந்து கொள்கின்றார் எமது சுயநல மனப்பாங்குகள், மற்றவர் பற்றி சிந்தனையற்ற வாழ்வுகள், எம்மை நாமே அர்த்தமில்லாமல் இயந்திரமாக்கிக் கொண்டமை அரசியல் பிறழ்வுகள், கல்வி நடவடிக்கைகள், பழைமையான முன்னோரின் வாழ்வுச் சிறப்புகள், கலைச்சிறப்புகள், கொவிட்கால வியாபாரங்கள். எனப் பல விடயங்களை எளிமையாக நகையுணர்வு ததும்பச் சொல்லிச் செல்லுகின்றார். ஒவ்வொரு தடவையும் அந்த மனிதன் நாய்களிடம் தோற்று விடுகின்றான். மனிதத் தவறுகளைச் சிந்திக்கின்றான். கொவிட் கால வாழ்வின் மீள்வாசிப்புக்களாக அவை நீளுகின்றன. அவர் கையாண்ட விலங்களுடனான உரையாடல் முறைமையானது, மாற்றமுறாத விலங்குகளின் வாழ்வையும் மாற்றமுற்ற மனித வாழ்வியலையும் ‘விலங்கு - மனித முரண்’ நிலையாக முன்வைப்பதால் வாசிக்கத் தூண்டியாகவும் இரசனை மிக்கதாகவும் மாறுகின்றது. அதனாலேயே அவரது இந்தப் படைப்பு சமூக வலைத் தளங்களிலேயே அதிக வரவேற்பினைப்பெற்றது.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் “ஊரடங்கு வேளையில் வெளியே செல்ல முடியாது வீட்டில் அடைபட்டுக்கிடந்த காலத்தைக் கடந்து வந்த நிலையை மற்றவருக்கு எடுத்துரைக்கும் ஒரு புனை திறன் நூல்” என வர்ணிக்கின்றார். முன்னுரை எழுதிய எழுத்தாளர் கருணாகரன் அவர்கள் “இதில் அரசியல் சமூகவியல் பண்பாட்டியல் வாழ்வியல் கல்வியியல் என அனைத்தும் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன. எளிய பேச்சு உரையாடல் மொழியிலே சுவாரசியமூட்டும் சித்திரிப்பு வழியே நம் ஒவ்வாருவருக்குள்ளும் ஊடுருவி ஒரு மாயவித்தைக் கலைஞனாக நம்மையும் நமக்குள் இருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றார். இந்நூலில் எண்பது அத்தியாயங்கள் உள்ளன. ஒவ்வொரு அத்தியாயமும் முத்துக்கள் போல் பெறுமதியானவை” என்கிறார்.

மொத்தத்தில் எதையும் காலத்துக்குப் பொருத்தமாக கலைத்துவமாக சொல்லுகின்ற அருட்தந்தை செ.அன்புராசா அடிகளின் புதிய நோக்கிலான ‘முருங்கன் முத்தமிழ் மன்ற’ வெளியீடாக 182 பக்கங்களில் வெளிவந்துள்ள இந்நூல் அனைவரும் வாசிக்க வேண்டிய மிக முக்கியமான நூலாகும்.

காவலூர் யோவான்

### “ஆமென்” என்பதன் பொருள்

ஆமென் என்பது எபிரேயச் சொல் இது விவிலியத்தின் இறுதி நூலான திருவெளிப்பாடு, புதிய ஏற்பாட்டின் சில இறை வேண்டல்கள், திருச்சபையின் திருவழிபாட்டு மன்றாட்டுகள் ஆகியவற்றின் இறுதியில் இடம் பெறுகிறது. நாம் அறிக்கையிடும் நம்பிக்கையை உறுதியாகவும், முழுமையாகவும் ஏற்றுக் கொள்வதை இது வெளிப்படுத்துகிறது. உறுதியான “ஆமென்” (தி.வெ 3:14) ஆக விளங்கும் கிறிஸ்து ஆண்டவருக்கு நம்மை முழுவதும் கையளிப்பதாகவும் இது வெளிப்படுத்துகிறது.

### கரங்களில் நற்கருணையைப் பெறும்போது...

கொவிட் தொற்றுக் காரணமாக சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும் நோக்குடன் இக்காலங்களில் நாம் நற்கருணையைக் கரங்களில் பெற்று உட்கொள்ளும் பழக்கத்தைத் தொடங்கியுள்ளோம். இந்நிலையில் நற்கருணையின் மாண்பினை நாம் மனதிற்கொள்ளவேண்டிய அவசியம் உண்டு.

நாம் இறைவனுக்கு மட்டுமே செய்யக்கூடிய ஆராதனையைத் திருப்பலிக் கொண்டாட்டத்தின் போதும் அதற்குப் புறம்பாகவும் நற்கருணை அருள் அடையாளத்திற்குச் செய்ய வேண்டும். புனிதப் படுத்தப்பட்ட திரு அப்பத்தை மிகுந்த கவனத்தோடு திருச்சபை பாதுகாக்கிறது. நாம் நற்கருணையைக் கரங்களில் ஏந்தும்போது, இறைவனை எம் கரங்களில் தாங்குகின்றோம் என்ற உணர்வு எமக்கு மேலோங்கவேண்டும். அருட்பணியார்களுக்கு முன்பாகவே பயபக்தியோடு நற்கருணையை உட்கொள்ள வேண்டும். நற்கருணையைக் கைகளில் பெறும்போது கைகளில் ஏனைய பொருட்கள் இருப்பதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். (கைக்குட்டை, திறப்புக் கோர்வை, கைத்தொலைபேசி என்பன)

காவலன் கலசம்



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

**1862ம் ஆண்டு யாழ் திருத்தூது மாவட்டப் புள்ளிவிபரங்கள்**

**(1863ம் ஆண்டு சென்னையில் வெளியிடப்பட்ட கத்தோலிக்க சமயப் புள்ளி விபரக் கோவையிலிருந்து எடுக்கப்பட்டது.)**

எல்லாமாக இக்கட்டுமானப்பணியை நிறைவுசெய்ய 3000 ஸ்டேர்லிங் பவுண்கள் முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மேற்குறிப்பிட்ட பாடசாலைகளைவிட யாழ்ப்பாணத்தில் 6 சுதேச மொழி (தமிழ்) பாடசாலைகள் உள்ளன. கத்தோலிக்கரல்லாத பெற்றோருக்குப் பிறந்த அனாதைப் பிள்ளைகளுக்கென பரிஸ் (பிரான்ஸ்) திருப்பாலத்துவ சபையினரின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் ஒரு காப்பகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆண்கள் பிரிவில் 701 பிள்ளைகள் உள்ளனர். இவர்களுள் பாதிக்கு மேற்பட்டோர் திருமுழுக்குப் பெற்றுவிட்டனர். இவர்களது நேர அட்டவணைப்படி செபம், பாடசாலைப் படிப்பு மற்றும் வேலை ஆகிய செயற்பாடுகள் முக்கிய இடம் பெறுகின்றன. பெண்கள் பிரிவில் 28 பேர் உள்ளனர்

சில வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நற்செய்தி அறிவிப்புச் சபை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருப்பாலத்துவசபையும் இவ்வாறு ஏற்படுத்தப்பட்டு இப்போது 15 கிளைகள் உள்ளன.

சிலாபம், கம்மல மறைத்தளங்களில் மகாஞானொடுக்கங்கள் இடம் பெற்றன. இவற்றில் இறைமக்களின் பங்குபற்றல் மிகவும் திருப்திகரமாக இருந்தது. சிலாபத்தில ஒரு பிரமாண்டமான ஆலயம் ஒருணா அடிகளின் பெரு முயற்சியால் கொதிக் டஸ்கன் கட்டிடக்கலை முறையில் கட்டப்பட்டு 1860ம் ஆண்டு நவம்பர் ஆயர் செமேரியாவினால் அருட்பொழிவு செய்யப்பட்டது. இவ்வாலயம்தான் இதுவரையில் இலங்கையிலுள்ள மிகப் பெரிய ஆலயம். இது 158 நிளமும் 48 அகலமுமுடையது. கம்மல மறைத்தளத்தில் இதனைவிடச்சிறிய மூன்று ஆல யங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குப் பொறுப்பானவர் இம்மறைத்தளத்தில் பணியாற்றும் கட்டிடக்கலையிலும் சிறந்து விளங்கும் கார்சியா அடிகளாவர்.

யாழ் திருத்தூது மாவட்ட ஆயர் செமேரியா தமது கவனம் முழுவதையும் மகா ஞானொடுக்கப்பணிகளுக்கும், கல்விப் பணிகளுக்குமே செலுத்தி வருகின்றார் எனலாம். 1860ம் ஆண்டு ஆயரவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்ட மேய்ப்புப்பணித்திருமுகத்தில் புரட்டஸ்தாந்து, அரச பாட-சாலைகளால் கத்தோலிக்க திரு அவைக்கு ஏற்பட்டுவரும் ஆபத்துக்களைப் பற்றி விளக்கியுள்ளார். ஆயரின் அனுசர-ணையுடன் அமல மரித்தியாகிகள் சபையின் குரு ஒருவர் (பொன்ஜீன் அடிகள்) இது சம்பந்தமாக விரிவாக எழுதியுள்ளார்.

இவற்றின் விளைவாக அரசு ஒப்பீட்டளவில் பெரிய எண்ணிக்கையிலான கத்தோலிக்க மக்களுக்கு நீதியான, ஏற்புடைய ஒரு கல்விக்கொள்கையை வகுக்கும் என நம்பலாம். எனவே இன்னும் சில வருடங்களில் சரிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இத்தீவின் கத்தோலிக்கரின் கல்வி நிலை உயர் நிலைக்கு வரலாம் என எதிர்பார்க்கலாம்.

**பேரருட்திரு. ஸ்ரீபன் செமேரியா, யாழ்திருத்தூது மாவட்ட ஆயர்**

| மறைத்தளம் | அருட்பணியாளர் | கத்தோலிக்கர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) யாழ்ப்பாணம் - | எல். சி. மொறுவா (L.C. Mauroit)<br>எவ்.பி. மௌக்கல் (F.P. Moukel)<br>ஜே.சி. மோலா (J.C. Mola)<br>சி. பொன்ஜீன் (C. Bonjean)<br>ஜே.எம். பொய்சோ (P.M. Boisseau)<br>பி.எம்.பூடின் (P.M. Boutin) | 7,100 |

யாழ்ப்பாண நகரில் அவ்வப்போது இறைவழிபாடுகள் இடம்பெறும் 6 ஆலயங்கள் உள்ளன: குறிப்பாக அந்தந்த ஆலயங்களின் பாதுகாவலர்களது திருநாட்களுக்கு முந்திய நவநாட்களில் கட்டாயமாக வழிபாடுகள் இடம்பெறுகின்றன. ஆயினும் வழமை யாக அன்றாட வழிபாடுகள் புனிதமரியாள் பேராலயத்தில் (இங்குதான் ஆயரும் மற்றக் குருக்களும் தமது வதிவிடத்தைக் கொண்டுள்ளனர்) ஞாயிறுதினங்களில் காலையில் 7 மணிக்கும் 9.30 மணிக்குமாக இரு திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படுகின்றன. காலையில் இடம்பெறும் மறையுரையுடன் பின்னேரமும் ஒருமறையுரையுண்டு. ஞாயிறு பிற்பகலில் திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெறும். வாரத்தில் மூன்றுநாட்கள் சிறுவர்கள் மறைக்கல்வி வகுப்புக்களுக்குப்பேராலயத்திற்கு வருவார்கள். வாரத்தில் ஒருநாள் மறைக்கல்விவகுப்பு ஆங்கிலத்தில் இடம்பெறும்.

| | | |
|---|---|---|
| வலிகாமம் | ஏ. செயின்ற்- ஜெனிஸ் (A. Saint-Geneys) | 5,930 |

இம்மறைத்தளத்தில் 22 ஆலயங்களும் சிற்றாலயங்களும் உள்ளன. இவற்றுள் 3 அல்லது 4 ஆலயங்கள்தான் நல்ல நிலையிலுள்ளன. வலிகாமம் எனும் இந்த அரச நிர்வாக மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 90,000.

| | | |
|---|---|---|
| 3) ஊர்காவற்துறை | ஜே பூசின் (J. Pouzin) | 5930 |

ஊர்காவற்துறையும் அருகிலுள்ள பிற சிறிய தீவுகளும் யாழ்ப்பாணத்திலிருந்து 2 - 30 மைல்கள் தொலைவிலுள்ளன. இத்தீவுகளெங்கினும் கோவா பிரிவினைவாதிகளெவரும், புரட்டஸ்தாந்து சபையினரெவருமில்லை. நெடுந்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு ஆகியவற்றுடன் இன்னும் சில சிறிய தீவுகளும் இம்மறைத்தளத்திலுள்ளன. தீவகத்தில் 5 நல்ல நிலையிலுள்ள ஆலயங்களுமுள்ளன. (தொடரும்...)

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

**ஈழத்தில் சங்கமித்த ஐரோப்பிய முத்துக்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

### St. Maria de la Conception

சாலோன் போடிங் இல்லத்திற்கு 1921ம் ஆண்டு பங்குனி மாதம் வந்து, புரட்டாதி 26ம் திகதி முதல் வாக்குத்தத்தம் செய்தார். அதிகாரத் தன்மை இவவில் குறைவுபட்டாலும் பக்தி தியாகம் என்பவற்றைப் பிள்ளைகள் மதித்ததுடன் தன்னை அறியாமலே மாறி டிலா நன்மை செய்தார்.

இலங்கைக்குப் பணிக்கு சகோதரிகளின் தேவை வேண்டியிருந்ததால், சபைத் தலைவி, இவவின் விருப்பை அறிந்து, பிறக்சீட் தாயாருடன் அனுப்ப முடிவு செய்தார். 1921ம் ஆண்டு மார்கழி 31ம் திகதி கப்பல் எடுத்து கொழும்பை வந்தடைந்து, பம்பலப்பிட்டியில் பணி ஏற்றுக் கொண்டார். 1922 புரட்டாதி 26 தன் வாக்குத்தத்தத்தைப் புதுப்பித்துக் கொண்டார். 1924 ஆடி 26ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு சக்கிறிஸ்ரியோடு தையல் வேலை செய்தார். 1924 தை 11 தியான இறுதி நாளில் நித்திய அர்ப்பணம் செய்த பின், 19ம் திகதி இளவாலைக்கு மாற்றம் பெற்றார்.

1925ம் ஆண்டு ஆனி 29ம் திகதி “இறைவன் மாத்திரமே” என்ற அழைப்புப் பெற்றதுடன் 1929ம் ஆண்டு தை 27ம் திகதி “இறைவன் மாத்திரமே” என்ற நிலைக்கு ஊக்குவிக்கப்பட்டார். 1931ம் ஆண்டு மாசியில் தமிழ் நவகன்னியருக்கு பொறுப்பாக இருந்த தியோப்பில் தாயாரின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இறைவன் இவரின் தியாக சேவையை ஆசீர்வதித்தார். 1936ம் ஆண்டு மார்கழி 18ம் திகதி லியோனித்தாயார், இவரை தேவ-னின் சொந்தக்குமாரத்தியாக ஏற்றுக் கொண்டார். இதனால் புதிய சக்தி பெற்றவராகத் தியாகத்துடன் இளவாலைப் பணியைத் தொடர்ந்தார்.

1938ம் ஆண்டு நல்ல உடல் நலத்தோடு முதலாவது உதவியாளராகவும், நவகன்னியரின் பொறுப்பு, சக்கிறிஸ்ரி வேலை ஐரோப்பிய சகோதரிகளின் உடுப்புக்கள் தைத்தல் என்னும் பணிகளைச் செய்து வந்தார். 1950ம் ஆண்டு ஆடி மாதத்தில் பிரான்சில் தன் குடும்பத்தை சந்தித்து ஆறுதல் அடைந்தார். சிறிது காலம் தலன்ஸ் தலமை இல்லத்திலும் பின் லூர்து கெபிக்கும் மார்த்தியாக்கிற்கும் யாத்திரை செய்து, புரட்டாதித் தொடக்கத்தில் றோமுக்கும் சென்று யூபிலி வருடத்தைக் கொண்டாடிய பின், இலங்கையிலிருந்து றோம் வந்திருந்த சென் ஆன் தாயாருடன், விமானம் மூலம் இலங்கை வந்து, இளவாலையில் உள்ள நவகன்னியருக்கு, நல்ல பிதாவின் ஆன்மீக வாஞ்சையைப் பகிர்ந்து கொண்டார். 1952ம் ஆண்டு மார்கழி 18ம் திகதி பண்டத்தரிப்பில் புதிய நவகன்னியர் இல்லம் திறக்கப்பட்டது. எனவே அங்கு, குழுவிற்கு தலைவியாகவும், நவகன்னியர் தலைவியாகவும் இருந்து அனுபவத்தோடும், ஆற்றலோடும் நல்ல உடல் நலத்தோடும் இருந்து பணியை ஆற்றினார்.

1957ம் ஆண்டு நவகன்னியர் தலைவியாக, பொதுச்சங்கத்தின் பிரதிநிதியாக பிரான்ஸ் சென்று, தன் குடும்பத்தவர்களையும் சந்தித்து, மகிழ்வுடன் திரும்பி வந்தார். 1958ம் ஆண்டு, அதிகார பூர்வமாக, 3 வருடத்திற்கு நவகன்னியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். புதிய ஒழுங்குத் திட்டத்தின் படி, 1961ம் ஆண்டு புரட்டாதி 18ம் திகதி 2ம் முறையும் 1964ம் ஆண்டு மூன்றாம் முறையும் புதுப்பித்து, 1966ம் ஆண்டு நீண்டகால நவகன்னியர் பொறுப்பில் இருந்து விலகி தை மாதம் (1967) 5ம் திகதி யாழ் சின்ன மடத்திற்குத் தலைவியாக நியமிக்கப்பட்டார்.

சித்திரை 15ம் திகதி தலன்ஸ் தலைமை இல்லம் சென்று, புரட்டாதி 7ம் திகதி இலங்கை திரும்பினார். மீளவும், 14ம் திகதி மன்னார் மடத்திற்கு தலைவியாகவும் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டார்.

1969ம் ஆண்டு மடுக்குழுவிற்கு தலைவியாக நியமிக்கப்பட்டார். 1970ம்

**அருட்சகோதரி அம்புறோஸின் மார்க்**

ஆண்டு யாழ். மடத்திற்கு அனுப்பப்பட்டு, 1971ம் ஆண்டு மயிலிட்டி புனித சூசையப்பர் மடத்திற்குத் தலைவியாக நியமிக்கப்பட்டு, வயோதிப சகோதரிகளுக்கு, உதவியாக இருந்தார். 1975ம் ஆண்டு யாழ் மடத்தில் இளைப்பாறி 1978ம் ஆண்டு வைகாசி 24ம் திகதி இறையடி சேர்ந்தார்.

1966ம் ஆண்டுவரை நவகன்னியர் பொறுப்பிலிருந்த போது, நல்ல குணம், பக்தி இலகுவான தொடர்புகளை தன்னகத்தே கொண்டிருந்தமையால், நாம் அவரில் அன்பு மரியாதை வணக்கத்துடன் பழகினோம். மொழி நன்கு தெரியாதபடியால் பயிற்சிகள் ஒழுங்குகளை விளங்கப்படுத்த கஸ்ரப்படுவார். இருந்தாலும், அவரின் தியாகத்தையும் தாழ்மையையும் இறைவன் ஆசீர் வதித்தார்.

சிறுவயதிலே பெற்றோரிடம் இருந்து பெற்றுக்கொண்ட விசுவாசமும், மரியாளில் வைத்திருந்த அன்பும் எமக்கு எடுத்துக்காட்டாக இருந்தது. நவகன்னியராகிய நாம், தவறுகள் செய்யும் போது, மிகவும் மனம் வருந்துவார். அவரின் சொற்கள் எமக்கு சில விசை கேட்க சிரிப்பாக இருக்கும். அவ்வேளை அதற்கு பரிகாரமாக தான் தரையை முத்தி செய்வா. அல்லது, கேற் திறந்திருக்கிறது போகலாம் என்று கூறுவார். வெளிக் கோவிலுக்குப் போகும்போது, தலை திருப்பாது அடக்கத்தோடு செபம் சொல்லிக் கொண்டு போகச் சொல்வார்.

ஈழ மண்ணில் ஆதித்தாய்மார் தடம்பதித்த 200 ஆண்டுகளை நன்றியோடு நினைவு கூரும் இவ்வேளையிலே அவர்கள் காட்டிய பிரமாணிக்கம், தியாகம் “இறைவன் மாத்திரமே” என்ற மனப்போக்கில், மறுப்புக்கூறாது, கீழ்ப்படிவுடன் சென்ற இடமெல்லாம், இறையரசைப் பரப்பிய புண்ணியவதிகளை நன்றியுடன் போற்றி நிற்கிறேன். அவர்களது பாதங்களை வணங்கி நிற்கிறேன். எம் தாய்மாருக்கு இருந்த அதே மனநிலை, எம்மவருக்கும் நெஞ்சத்தில் நிலைத்துநிற்க வரம் வேண்டி நிற்கிறேன். *(தொடரும்..)*

## காவலன் கலசம்

# கொரோனா முடக்கமும் நம்பிக்கை வாழ்வும்

**வழிபாடுகள், சமயச் சடங்குகள் எல்லாம் நம்மைச் சமயப்பற்றாளர்களாக நம்பிக்கையாளர்களாக வாழ வழிவகுக்க வேண்டும், நமது நம்பிக்கை, நமது வாழ்வின் செயல்களால் நிருபிக்கப்படவேண்டும்.**

அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்

**ஆ**லய வழிபாடுகள், சடங்குகள் என்று நமது கிறிஸ்தவ வாழ்வில் பரம்பரை பரம் பரையாய் ஊறித் திளைத்த நம்மேல் கொரொனா கொடிய நோய் பெரும் பேரடியாய் பேரடியாய் வந்து விழுந்துள்ளது. நமது நம்பிக்கை வாழ்வு, காற்றில் பஞ்சாய் பறந்துவிட்டதே என்று ஏங்கித் தவிப்போர் நம்மில் எண்ணிலடங்கா. காற்றுப் போன பலூன்போல் செய்வதறியாது மூச்சுத் திணறுகின்றோம். ஆனால் இந்த முடக்கத்தினால் ஏற்பட்ட காலம் நமது நம்பிக்கை வாழ்வுபற்றி, சீடத்துவ வாழ்வுபற்றி ஆழமாக நாம் மீளாய்வு செய்ய இறைவன் நமக்குக் கொடுத்த அரிய காலம் “அருளின் காலம்” அருமையான காலம்.

ஆண்டவர் இயேசுதாமே தமது சீடர் என்பவர் யார்? கிறிஸ்தவர்கள் என்ற நிலையில் நமது நம்பிக்கையை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று தெளிவாகக் கூறியிருக்கின்றார். யோவான் 15:12:13:35 சொற்றொடர்களில் “நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை. நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்துகொள்வர்” என்று கூறுகிறார்.

எவ்வாறு நாம் ஒருவரையொருவர் அன்பு செய்யலாம் என்று இயேசுவே இரண்டு உவமைகள் மூலம் விளக்குகிறார். ஒன்று லூக் 10:25-37ல் வரும் நல்ல சமாரியர் உவமை. நல்ல சமாரியர் ஒரு குருவோ அன்றேல் ஒரு சமயப்பற்றாளரோ அல்ல. அன்று வாழ்ந்த குருக்கள் சமயவாதிகளின் கண்களில் அவர் ஒரு தீட்டுப்பட்டவர். ஆனால், அவர் கடவுளுக்கு முன்னால் பிரமாணிக்கமானவர். தேவையில் வாடிய தனது அயலானை அன்பு செய்து அவருக்குப்போதிய அக்கறை காட்டியவர்.

வழிபாடுகள், சமயச் சடங்குகள் எல்லாம் நம்மை சமயப்பற்றாளர்களாக நம்பிக்கையாளர்களாக வாழ வழிவகுக்க வேண்டும், அருள்பாலிக்க வேண்டும். நமது நம்பிக்கை, நமது வாழ்வின் செயல்களால் நிருபிக்கப்படவேண்டும். இயேசு காட்டிய மார்க்கம் இணைபிரியாத இறையன்பும் பிறர் அன்புமே. இயேசு தாமே மத். 7:21ல் “என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே” எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் நுழைவதில்லை என்று கூறுகிறார். திருத்தூதர் யாக்கோப்பு தனது திருமுகம் 2:14-17 சொற்றொடர்களில் “என் சகோதர சகோதரிகளே, தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால், அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்கமுடியுமா? ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து “நலமே சென்று வாருங்கள் குளிர்காய்ந்துகொள்ளுங்கள் பசியாறிக் கொள்ளுங்கள்” என்பாரென்றால் அதனால் பயன் என்ன? அதைப் போலவே, நம்பிக்கையும் செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்.” என்று கூறுகின்றார்.

இரண்டாவதாக மத்.25:31-46 சொற்றொடர்களில் கிறிஸ்து கூறும் இறுதித் தீர்ப்பு. இறுதித் தீர்ப்பின்போது மனு-மகன் ஆயர், அருட்தந்தையர்களோடு வரப்போவதில்லை. வந்து, அவர்:

- நீர் தவறாமல் ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றினீர்
- நீர் சிலுவைப்பாதையில் பிரமாணிக்கமாகக் கலந்துகொண்டீர்
- நீர் திருச்செபமாலையை, திருப்புகழ் மாலையை ஒழுங்காகச் சொன்னீர்
- நீர் நற்கருணை ஆராதனையில் பக்தியாகப் பங்குபற்றினீர்
- நீர் அந்தோனியார் திருநாளில் மகிழ்ச்சியாகக் கலந்துகொண்டீர்

என்று சொல்லப்போவதில்லை (இவற்றை நான் கூறும்போது தவறாக விளங்கி பிழையாகக் கருத்திற்கொள்ள வேண்டாம். இவை தேவையில்லை என்று நான் சொல்லவரவில்லை. நான் கேட்பது) இவை நம்பிக்கை வாழ்வை வாழ்வதற்கு நமக்கு அருள்பாலிக்கின்றனவா? அல்லது வெற்று வார்த்தைகளாக, வெறும் சடங்குகளாக நின்று விடுகின்றனவா என்று சிந்திப்பது மிக அவசியம். எத்தனை வருடங்களாக இவற்றைக் கடைப்பிடித்துள்ளோம்? எவ்வளவுக்கு இவை நமது நம்பிக்கையை வாழ்வாக்கியுள்ளன? பழைய நற்கருணைப் பாடல் வரிகள் என் காதுகளில் ரீங்காரம் செய்கின்றன. “நிதமும் என்னில் வருகின்றீர் ஏனோ என்னில் மாற்றமில்லை?” இதனால்தான் வேதம் கூறுகிறது நாடெல்லாம் பாழாய்ப் போகிறது. ஏனென்றால் தன் இதயத்தின் ஆழத்தில் சிந்திப்பார் எவருமில்லை. இதைத்தான் கவிஞன் ஒருவன் பாடினான் “சிந்தனை செய் மனமே” என்று. கிரேக்க ஞானி சோக்கிரற்றீஸ் சொன்னார். ஏன்? எதற்கு? எப்படி? என்று கேட்டு வாழுங்கள். இவை அனைத்தையும் செய்வதற்கு ஆண்டவரால் கொடுக்கப்பட்ட அருமையான காலம் இந்த முடக்க காலம். மாறாக மனு-மகன் வானதூதருடன் வந்து தனது வலப்பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து

**“நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவுகொடுத்தீர்கள்**
**தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள்**
**அன்னியனாய் இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்**
**நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக் கொண்டீர்கள்**
**சிறையிலிருந்தேன், என்னைத் தேடிவந்தீர்கள்**

நீங்கள் மனிதத் தன்மையுடன், நேர்மையாளராய், கடின உழைப்பாளியாய், தாழ்ச்சியுள்ளவராய் இருந்தீர்கள் அதாவது நீங்கள் நம்பிக்கையாளராய், நம்பிக்கை நிறைந்தவராய் இருந்தீர்கள்.

“எனவே, ஆசி பெற்றவர்களே! தந்தையின் இல்லத்திற்கு வாருங்கள்” என்பார். பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, “சபிக்கப்பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில், நான் பசியாய் இருந்தேன் நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணிக்கவில்லை நான் அன்னியனாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக்கொள்ளவில்லை” என்பார்.

எனவே, இந்தக் கொரோனா முடக்கத்தின்போது நமது நம்பிக்கை வாழ்வின் முக்கியத்துவங்கள், சீடத்துவத்தின் முன்னுரிமைகள் எவை என்ற வினா வைக் கேட்டு, நமது நம்பிக்கை வாழ்வை இதய சுத்தியோடு மீளாய்வு செய்வோமா? மீளாய்வு செய்து, இறுதித் தீர்ப்பின்போது நாம் எப்பக்கம் நிற்கப்போகிறோம் என்பதை முடிவு செய்வோம். இறைவன் நமது அகக் கண்களைத் திறந்து, நம்மை உறுதிப்படுத்தி மனித நேயத்துடன் பிறர் அன்புடன் வாழச் செய்வாராக!

---

## சந்தியோகுமாயோர்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கி.பி எட்டாம் நூற்றாண்டில் இஸ்லாமியப் படைகள் இஸ்பானியாவை ஆக்கிரமித்திருந்த வேளை புனித யாக்கோபு வெண்குதிரையில் தோன்றி இஸ்லாமியப் படைகளை அழித்து இஸ்பானியரை வெற்றிபெறச் செய்ததாக மரபுக்கதை கூறுகின்றது. இவை அனைத்தையும் பேதுருப் புலவர் நூலில் பதிவு செய்திருப்பதோடு கொம்பெஸ்ரேலாவில் கட்டப்பட்ட புனித யாக்கோபுவின் ஆலயத்திற்கு புனிதரைத் தரிசிக்கச் சென்ற பக்தர்களுக்கு ஆற்றப்பட்ட புதுமைகள் இரண்டைப் பற்றியும் கூறியிருக்கின்றார். இவ்வண்ணம் பாலஸ்தீனாவோடும், இஸ்பானியாவோடும் தொடர்புபட்ட கதையை இந்நாட்டில் வாழ்வோர் இலகுவாக விளங்கிக்கொள்ளும் விதமாக தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் கருத்துக்களையும் புகுத்தி தமிழ்ச் சூழலையும் பண்பாட்டு மரபுகளையும் வர்ணனையாகக்கொண்டு பண்பாட்டு மணம் கமழும் வண்ணம் மிகச் சிறப்புற அமைத்திருக்கின்றார். எடுத்துக்காட்டாக யாக்கோப்பின் பிறப்பையொட்டிய நிகழ்வுகளைக் கூறும்போது அவரை ஒரு தமிழ்க் குழந்தையாகவே சித்தரித்திருக்கின்றார். யாக்கோபிற்கு பெயரிடும் போது உற்றார் உறவினர்கள் எல்லோரும் ஒன்றுகூடி வீதியெங்கும் அலங்கரித்து, மாலை அணிவித்து, குங்குமத்தால் பொட்டிட்டு, கோலமிட்டு பாவாணர்களும் கற்றோரும் முழங்க, முனிவர்கள் நவமணிகள் பதிக்க எனவும் குழந்தையைத் தொட்டிலேற்றும் போது பலவகை மணிகளாலுமான காப்பு, சதங்கை, அரைஞாண் கயிறு என்பவற்றைக் குழந்தைக்கு அணிவித்ததாகப் பாடி தமிழ் மணம்கமழச் செய்கின்றார். சந்தியோகுமாயோர் அம்மானையில் திருவிவிலியத்தில் இடம்பெறும் பல கதைகள் சம்பவங்கள் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன. நூல் இயற்றப்பட்ட காலத்தில் திருவிவிலியம் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் இந்துக்களாக இருந்து மனந்திரும்பிய புதிய கிறிஸ்தவர்களுக்கு திருவிவிலியக் கருத்துக்களை அறிந்துகொள்ள வாய்ப்பிருக்கவில்லை. இதனை நன்குணர்ந்துகொண்ட பேதுருப்புலவர் திருவிவிலியக் கதை கள் சம்பவங்கள் பலவற்றைப் பற்றிய குறிப்புக்களை நூலில் முன்வித்திருக்கின்றார். குறிப்பாக தொடக்க நூலில் இடம்பெறும் உலகப்படைப்பு, ஆதிப்பெற்றோர் பாவம், பெருவெள்ளம், பாபேல் கோபுரக்கதை பற்றிய குறிப்புக்களையும் விடுதலைப்பயண நூலில் வரும் மோசே பற்றிய குறிப்புக்களையும் பதிவு செய்திருக்கின்றார். மேலும் நற்செய்தி நூல்களில் இடம்பெறும் இயேசுவின் பிறப்பு, சீடர்களை அழைத்தல், வெளிப்படைப்பணி, அவர் செய்த புதுமைகள், பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றிய குறிப்புக்களையும் நூலில் இடம்பெறச் செய்திருக்கின்றார்.

கிறிஸ்தவ இறையியலின் முக்கியமான ஓர் கோட்பாடாகக் கருதப்படுவது தந்தை, மகன் கிறிஸ்து, தூய ஆவி பற்றிய திரித்துவக் கோட்பாடாகும். இவை பற்றிய குறிப்புக்களை முன்வைத்து மனம்மாறிய கிறிஸ்தவர்கள் தந்தை, மகன் இயேசுக்கிறிஸ்து, தூய ஆவி ஆகிய மூவொரு கடவுளில் மட்டும் நம்பிக்கை கொண்டு வாழவேண்டும் என அறிவுறுத்துகின்றார். இவ்வண்ணம் அன்னை மரியாள், புனிதர்கள், திருமுழுக்கு, திருச்சபை, பாவம் - மீட்பு என கத்தோலிக்க இறையியலில் உள்ளடங்கும் பல விடயங்கள் பற்றிய குறிப்புக்கள் நூலில் இடம்பெற்றிருப்பதன் மூலம் இந்நூல் ஒரு சிறந்த இறையியல் நூலாகவே புலப்படுகின்றது.

சந்தியோகுமாயோர் அம்மானை ஓர் கதைப்பாடல் அம்மானையாகும். கதைப்பாடல் அம்மானையானது வழிபாடு, வணக்கம், வரலாறு, வாழ்த்து என்ற நான்கு உறுப்புக்களைக் கொண்டு அமைதல் வேண்டும் என்பதற்கொப்ப பேதுருப்புலவரும், இவற்றைக் கவனத்தில் எடுத்து இலக்கியம் படைத்திருக்கின்றார். கதைப்பாடல் அம்மானைகள் பொதுவாக இரண்டிரண்டு அடிகள் ஓர் எதுகை யாய் அமைந்த கண்ணிகளாக அமையும். இந்நூலும் இரண்டிரண்டு அடிகள் ஒரு எதுகையாய் அமையப் பெற்றுள்ளது. பேதுருப்புலவர் பாடல்களை கலிவெண்பாவுக்குரிய துள்ளல் ஓசையில் அமைத்திருக்கின்றார். ஒரு கவிஞன் தன்னுடைய எண்ணங்களை வாசகர் நெஞ்சில் ஆழமாகவும் விரைவாகவும் பதியுமாறு எடுத்துரைக்க பல்வேறு விதமான உத்திகளைக் கையாள்வது வழக்கம். பேதுருப்புலவரும் யாகப்பரின் கதையை படிப்போர் நெஞ்சில் பதியும் வண்ணம் எடுத்துரைக்க சில உத்திகளைக் கையாண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தொகுத்து நோக்கின் போர்த்துக்கேயர் காலத்தில் கிளாலியில் கட்டப்பட்ட புனித யாக்கோபுவின் ஆலயத்திற்கு விழாக்கொண்டாட யாழ். குடா நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்த பக்தர்களுக்கு புனிதரின் வாழ்வை எடுத்தியம்பும் நோக்கில் பேதுருப்புலவரால் இயற்றப்பட்ட சந்தியோகுமாயோர் அம்மானை தமிழில் உள்ள சிற்றிலக்கியங்களில் ஒன்றான நாட்டார் இலக்கியமான அம்மானை இலக்கியத்தின் வடிவையும் அமைப்பையும் தழுவி இயற்றப்பட்டிருப்பது நோக்கத்தக்கது. ஒரு இலக்கியம் இயற்கையின் பலவித மலர்கள் போன்றும், வண்ணங்கள் போன்றும் வியப்பூட்டுவனவாக அமையும் போது அதனைக் கற்போருக்கு வகை வகையான சுவைகளை வாரி வழங்கும். பேதுருப்புலவரும் புனித யாக்கோபின் கதையை படிப்போர் நெஞ்சில் பதியும் வண்ணம் எடுத்துரைக்க சிறந்த சொல்லாட்சிகளையும் வர்ணனைகளையும் பயன்படுத்தி தூய தமிழில் எதுகை மோனையில் ஓசை நயம் மிக்கதாக இயற்றியிருக்கின்றார். கத்தோலிக்க இறையியல் கருத்துக்கள் பல நூலில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதன் மூலம் நூல் தோன்றிய காலத்தில் இந்துக்களாக இருந்து மனந்திரும்பிய கிறிஸ்தவர்களுக்கு மறைக்கல்வியை வழங்கும் சிறந்த சாதனமாகவும் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனக்கருத முடியும். இவ்விதம் சிறப்புற்று விளங்கும், ஒரு காலத்தில் நற்செய்திப் பரப்புதலுக்காகப் பயன்பட்ட மண்வாசனை மிக்க இவ் இலக்கியத்தைப் பாதுகாப்பதும் நவீன காலத்திற்கேற்ற வகையில் மெருகூட்டிப் பயன்படுத்துவதும் இவற்றில் ஆர்வம் உள்ளவர்களால் கருத்திலெடுக்கப்படவேண்டும்.

# காவலன் கலசம்


## ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துனர்களை உருவாக்கும் பயிற்சி நெறி
(Personality Growth & Co- Counsellor's Training Programme)

ICOF – வளர்பிறை உளவளத்துணை நிலையம்

வளர்பிறை உளவளத்துணை நிலையத்தில் புலமை வாய்ந்த வளவாளர்களினால் மனித ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துனர்களை உருவாக்கும் பயிற்சி நெறி 02.08.2021 அன்று எமது நிறுவனத்தில் ஏழாம் பிரிவினருக்கான (7th Batch) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சிக்காலம் :-100 மணித்தியாலங்கள், (9.00 – 1.00) வகுப்புக்கள் நடைபெறும்.
- பயிற்சியின் பின்னர் எமது நிறுவனத்தின் பெறுமதியான கற்கைநெறிச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கல்வித்தகமை :- O/L, A/L
- விண்ணப்ப முடிவு :- 30.07.2021
- தகுதியானவர்கள் தமது பதிவுகளை எமது அலுவலகத்தில் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
- அனுமதிக் கட்டணம் :- 1,000.00
- குறிப்பு :- வகுப்புக்கள் இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.

**1ம் பிரிவு– வாரநாட்கள் – 02.08.2021 ஆரம்பம், 2ம் பிரிவு– சனி, ஞாயிறு – 07.08.2021 ஆரம்பம்**

வளர்பிறை உளவளத்துணை நிலையம் (ICOF)
இல 05, பிளச்சஸ் லேன், சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
**தொடர்புகளுக்கு- 0772660209- 0212228238**


## விண்ணக வாழ்வின் 1ம் வருட நினைவலை



மண்ணில் 04 • 07 • 1972
உதிர்வு 20 • 07 • 2020

AD 56

அமரர்
### சவரிமுத்து கிறிஸ்ரியன் அலெக்சியூஸ்

"உன் பெயரைச் சொல்லி
உன்னை அழைத்தேன் – நீ
எனக்கு உரியவன்"(எசா.13:1)

அமைதியான வாழ்க்கையால்
அடக்கமான புன்னகையால்
அளவான பேச்சால் – எம்
அனைவரையும் அன்பு செய்த தெய்வமே

எம்மை வாழ வைக்க நீர் சென்ற
அன்னிய தேசமதில் நீர் எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டொன்று ஆனதையா
ஆறாது எம் துயரம்
தேற்றிட முயல்கிறோம்.

**ஆண்டவன் சந்நிதியில் இளைப்பாறிடுவீர்
எம் செபங்களில் உமக்காக
இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்.**

இளவாலை

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## விண்ணுலக வாழ்வில் 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 16 • 05 • 1940
மறைவு 05 • 07 • 2021

### முடியப்பு ஞானமுத்து (மணியம்)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்:
(யோவான் 11:25)

இரக்கம் நிறைந்த இறைவா!

இவ்வுலக வாழ்விலிருந்து விண்ணுலகத்துக்கு அழைத்துக் கொண்ட உமது அடியார் அமரர் **முடியப்பு ஞானமுத்து** அவர்களின் பாவங்களை மன்னித்து, உமது வான் வீட்டில் ஏற்று, நித்திய இளைப்பாற்றியை அளித்து தருளும்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக எதிர்வரும் 04.08.2021 புதன் கிழமை காலை 7.00 மணிக்கு கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குகொண்டு இவருக்காகப் பிரார்த்திப்புடன் அன்றையதினம் அன்னாரின் இல்லத்தில் நிகழும் மதியபோசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கல்வியியற் கல்லூரி வீதி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்*

*பிரிவாற்றாது துயருறும்
குடும்பத்தினர்*

## செபமாலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போது இலங்கை மாகாண ஆலோசனைக் குழுவின் மூன்று ஆண்டு காலம் நிறைவுற்றபடியால் புதிய ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அருட்தந்தை அ. பிரான்சிஸ் ஜெயசீலன் செ.தா. அடிகளார் கடந்த மூன்று ஆண்டுகளாக மாகாண முதல்வராக நல்முறையில் பணியாற்றியவர் மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு புதிய மாகாண முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது ஆலோசகர்களாக மூன்று குருக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அருட்தந்தை, அ.ம.ஸ்டீபன் செ.தா. அடிகளார், அருட்தந்தை. மரியதாஸ் லியோனிஸ் செ.தா. அடிகளார், அருட்தந்தை. இம்மானுவேல் ராஜேஸ்வரன் செ.தா. அடிகளார் ஆகிய செபமாலைத்தாசர் சபைக் குருக்கள் ஆலோசனையாளர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள். இவர்களின் பணி ஜூலை மாதம் 30ம் திகதியில் இருந்து ஆரம்பிக்கின்றது.

இவர்கள் இறையடியார் B.A.தோமஸ் OMI அடிகளாரின் ஆன்மீகப் பாதையில் இத்துறவு சபையை இலங்கை நாட்டில் வழிநடத்திச்செல்ல வேண்டிய அருள் வரங்களை இவர்கள் மீது செபமாலை அன்னையின் வழியாகப் பொழிந்தருள நமது மன்றாட்டுகளில் வேண்டிக்கொள்வோம்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 25 • 04 • 1962
ஆண்டவன் அடியில் 15 • 06 • 2021

AD 57

அமரர்
### பெர்னாண்டோ வலன்ரைன் உதயகுமார்

"சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

அன்புள்ளம் கொண்ட அப்பா...!
எங்கு சென்றீர் எம்மை விட்டு 31நாள் கடந்து விட்டது அப்பா
எங்களைக் காணாமல் எப்படி இருக்கிறீர்கள் அப்பா
உமது உடல் சுகமாகி வீடு திரும்புவீர்கள் என்று நாட்களை எண்ணி எதிர்பார்த்திருந்தோம். ஆனால் கடவுள் உம்மை தன்னுடன் அழைத்துக் கொண்டார் என்ற செய்தி கேட்டு நம்பமுடியாமல் இன்னும் திகைத்து நிற்கின்றோம் அப்பா நீங்கள் திரும்ப வருவீர்கள் என்று வாசலை எதிர்பார்த்து நிற்கின்றோம் அப்பா.

இவரின் ஆன்மா நித்தியத்திற்கும் இறைவனோடு ஒன்றித்திருக்க மன்றாடுகின்றோம்.

*பலாலி
அன்ரனிபுரம்.*

*நம்பமுடியாமல்
தவிக்கும்
குடும்பத்தினர்.*

## தாத்தாக்கள் பாட்டிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

நிறைபேறு பலன்களைப் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளிகள், கைவிடப்பட்டோர், மாற்றுத் திறனாளிகள், மற்றும், உதவி தேவைப்படும் வயது முதிர்ந்தோரை நேரிடையாக, அல்லது, இணையம் வழியாகத் தொடர்புகொண்டு, அவர்களோடு போதுமான நேரம் உரையாடுபவர்களுக்கும் இந்த நிறைபேறு பலன்கள் கிடைக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், கடுமையான காரணங்களுக்காகத் தங்கள் வீடுகளைவிட்டு வெளியே செல்லமுடியாத நிலையிலும், நோயுற்றும் இருக்கும் வயதானவர்கள், இந்த உலக நாளில், எல்லாவிதப் பாவங்களையும் விலக்கி, அன்றைய நாளில் நடைபெறும் புனித நிகழ்வுகளில், தொலைக்காட்சி மற்றும், வானொலி வழியாக, ஆன்மீக முறையில் பங்குகொண்டால், நிறைபேறு பலன்களைப் பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தையின் ஒப்புதலுடன் இந்த நிறை பேறு பலன்கள் பற்றி அறிவித்துள்ள, Apostolic Penitentiary எனப்படும் திருஅவையின் மனசாட்சி திருப்பீடத்துறை, நம்பிக்கையாளர்கள் இந்த நிறைபேறு பலன்களைப் பெறுவதற்கு உதவியாக, அருட்பணியாளர்கள், தங்களின் மேய்ப்புப்பணிக் கடமையை ஆற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

திருஅவை வழங்கும் நிறைபேறு பலன்களைப் பெறுவதற்கு, ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கு பெறுதல், திருப்பலியில் பங்குகொண்டு திருநற்கருணை அருந்துதல், திருத்தந்தையின் கருத்துக்களுக்காக இறைவேண்டல் செய்தல் ஆகியவை, வரையறைகளாகும்.

ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதத்தின் நான்காம் ஞாயிறன்று, தாத்தாக்கள் பாட்டிகள் மற்றும், வயது முதிர்ந்தோர் உலக நாள், கத்தோலிக்கத் திருஅவையில் சிறப்பிக்கப்படுகின்றது.

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்புச் சகோதரிகள் சபைச் சேர்ந்த அருட்சகோதரி **மேரி ஹெற்றீசியா சின்னத்தம்பி** யாழ்ப்பாணத்தில் வடமராட்சி பிரதேசத்தில் இந்துக் குடும்பத்தில் பிறந்த இவர், ஆசிரியராக பணிபுரிந்த வேளையில் இறை அழைப்பைப் பெற்றுக் கொண்டார். மகிழ்வோடு அவ்வழைப்பினை ஏற்று இறைமக்களை ஆன்மீகத்திலும், கல்வி அறிவிலும் மேம்பெற வாழ்வின் இறுதி மூச்சுவரை பணி செய்தார். இவரது பணி யாழ் திருஅவையில் மாதகல் பங்கில் மகத்தானதாக இருந்தது. அருட்சகோதரியின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற மன்றாடுகின்றோம்.

## அன்பியம் பற்றிய...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயங்களைத் துப்பரவு செய்தல், மரங்களை நடுதல் ஆலயத்திற்குத் தேவையான புதிய மண்டபம் அமைக்கும் பணியை நாம் தொடங்குகின்ற போது அது ஒரு சிலருடைய முயற்சியாக இருக்காமல் அது நமக்குத் தேவையானது எமது பங்களிப்பை முடியுமான அளவு வழங்க வேண்டுமென்கின்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் பல வருடங்களுக்கு முன்பு அன்பியங்கள் பேராலயப் பங்கில் ஆரம்பிக்கப்பட்டாலும் இதன் தொடர்ச்சியான இயங்கு நிலைக்கு விழிப்போடு, பொறுமையோடு, ஓய்வின்றி உழைக்கவேண்டும். பேராலய அன்பியங்கள் குழுவிற்கென ஒரு viber group ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் வழியில் அன்பியத்தின் பாதுகாவலராக விரும்பக்கூடிய புனிதர்கள் நினைவுகூரப்பட்டு கொண்டாடப்படுகிறார்கள். அன்பியக் கூட்டங்கள் அறிவிக்கப்படுகிறது.அன்பியங்கள் நடந்து முடிந்தற்குப் பிற்பாடு தங்களது மகிழ்ச்சியான அனுபவங்களை viber மூலமாகப் பகிர்ந்து கொள்வார்கள்.

எனவே அன்பியங்களினூடாக சில அன்பிய வாழ்வநினைவூட்டப்பட்டுகொண்டாடப்படுகிறது. இதனால் பிள்ளைகள் உறுப்பினர்கள் பாராட்டப்படுகிறார்கள், வாழ்த்துக்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். இறையுறவில் தமது வாழ்வை நகர்த்தி, சகோதர அன்புடனும் ஒற்றுமையுடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

# கொரோனா அபாய நிலையில்

## கவனமாக இருங்கள். அவதானமாக இருங்கள்.

### மக்களுக்கு யாழ். மாவட்ட சர்வமத பேரவை வேண்டுகோள்




கொரோனா பெருந்தொற்று தற்போது மிகவும் அபாயகரமான நிலைக்கு வந்துள்ளதால் மக்கள் அனைவரையும் கவனமாகவும் அவதானமாகவும் இருக்குமாறு யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை எச்சரிக்கையுடனான வேண்டுகோளை விடுத்துள்ளது.

இதுபற்றி மக்களுக்கு அறிவுறுத்தும் வகையிலான பதாதைகளை யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை பொது இடங்களில் காட்சிப்படுத்தி வருகிறது. இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த 12-07-2021 திங்கட்கிழமையன்று யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்றபோது யாழ். மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலரோடு யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். இதில் கலந்துகொண்ட யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் கருத்துத் தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார்.

- *பெருந்தொற்று நீங்க அனைவரும் ஒன்றிணைந்து பிரார்த்தனை செய்வோம்.*
- *தொற்றுக்கிருமியைத் தடுத்து எம்மையும் எல்லாரையும் பாதுகாக்க பொறுப்புடன் செயற்படுவோம்.*
- *நோயினால் மற்றும் தற்கால சூழ்நிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்.*
- *அனைவரும் தடுப்பூசி பெற ஆவன செய்வோம்.*

அத்துடன் மேற்படி கருத்துக்களை உள்ளடக்கிய பதாதைகள் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பொது இடங்களில் காட்சிப்டுத்தப்பட்டு வருகின்றன. இது தவிர தொலைக்காட்சி வழியாகவும் கொரோனாத் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது.

# வன்னி கியூடெக் நிறுவனத்தால் இரத்ததான முகாம்



கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தினால் சமாதான நல்லிணக்க செயற்றிட்டத்தின் ஊடாக முல்லைத்தீவுப் பங்கைச் சேர்ந்த இளையோருக்கான இரத்ததான முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 11.07.2021 அன்று நடைபெற்றது. இவ் இரத்ததான முகாமில் முல்லைத்தீவுப் பங்கு இளைஞர் யுவதிகள் கலந்து இரத்ததானம் செய்தனர். முல்லைத்தீவுப் பங்குத் தந்தை அருட்பணி அகஸ்ரின் அடிகளாரின் வழிகாட்டுதலுடன், அருட்பணி சோபன் ரூபஸ் அடிகளாரின் மேற்பார்வையில் சுகாதார வைத்தியர் மற்றும் தாதியர் குழுவினரின் பூரண உதவியுடன் இந்நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது. வன்னி கியூடெக் இயக்குநர் அருட்பணி செபமாலை செபஜீவன் அடிகளார் இந்நிகழ்விற்கான அனுசரனையினை வழங்கினார்.

# வழிபாட்டு ஸ்தலங்களில் வழிபாடுகளுக்கு அனுமதி

கொவிட் 19 பெருந்தொற்றுக் காரணமாக முடக்கப்பட்டிருந்த வழிபாட்டு ஸ்தலங்கள் மக்களின் வழிபாடுகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. சமூக இடைவெளி பேணுதல், முகக்கவசம் அணிதல், கைகளைக் கழுவுதல் போன்ற சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து ஆலயங்களில் வழிபாடுகள் நடாத்த சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

வணக்கஸ்தலங்கள் மீண்டும் மக்களின் வழிபாடுகளுக்குத் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்விடங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் அடங்கிய சுற்றறிக்கை இலங்கை சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் மக்கள் வழிபாடுகளுக்காக ஒன்றுகூடி வரும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள் மக்களின் எண்ணிக்கை பற்றிய பல விடயங்கள் தெளிவான விதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வழிபாடுகளில் மக்கள் கலந்து கொள்ளும் போது ஒருவருக்கிடையில் நாலாபுறமும் ஒரு மீற்றர் இடைவெளி கட்டாயம் பேணப்பட வேண்டும் என்றும் திவ்விய நற்கருணை வழங்கும் போது வழங்குபவரும் பெறுபவரும் முகக்கவசம் அணிந்துகொள்ள வேண்டும் என்றும் திவ்விய நற்கருணை கைகளில் வழங்கப்பட வேண்டுமெனவும் மக்கள் ஆலயங்களில் திருச்சுருபங்களைத் தொட்டு மன்றாடுவதைத் தவிர்க்க வேண்டும் போன்ற விடயங்களும் இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. வணக்கஸ்தலங்களில் ஒன்றுகூடும் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றித் தேவையற்ற நடமாட்டங்களையும் ஆடம்பரங்களையும் தவிர்த்து பெரும்தொற்றிலிருந்து எம்மையும் எம் சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்வோம்.

# யாழ். கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் 700 தென்னங்கன்றுகள் நடுகை



கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் எழுதுமட்டுவாளில் அமைந்துள்ள ஆயர் ஜஸ்ரின் தோட்டத்தில் அருட்தந்தை S. இயூயின் பிரான்சிஸ் தலைமையில் தோட்ட உட்கட்டமைப்பு கௌரவ அமைச்சர் திரு அருந்திக்க பெர்னான்டோ அவர்களின் அனுசரணையுடன் 10.07.2021 அன்று 700 தென்னங்கன்றுகள் நாட்டப்பட்டு நான்கு சமயத் தலைவர்களின் இறை ஆசீரோடு இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி P.J. ஜெபரட்ணம் அடிகளும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட, இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா அவர்களும கலந்து சிறப்பித்தனர். மேலும் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் தமது உரையில்,இயற்கையை வளப்படுத்தி எமது தேசத்தை மேம்படுத்த மேற்கொள்ளும் மரநடுகை இன்றைய காலத்தின் தேவையாகும் இதனை முன்னெடுக்க ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படும் நன்முயற்சிகளில் ஈடுபடும் கியூடெக் கரித்தாஸின் முயற்சிகள் மேலும் வளர இறை ஆசீர் வேண்டி வாழ்த்துகின்றேன் என்றார். இந்நிகழ்வில் கியூடெக் கரித்தாஸ் பணியாளர்களும் இராணுவ அதிகாரிகளும், இராணுவத்தினரும் கலந்து சிறப்பித்தனர்.

# கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாணம் கோவிட் 19 நிவாரணப் பணிகள்



கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாணம் நிறுவனத்தினால் 700 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் ரூபா 8,40,000.00 பெறுமதியில் வழங்கப்பட்டது. இதில் 300 உலர் உணவுப் பொதிகள் மாவட்ட செயலர் மற்றும் பிரதேச செயலர் ஊடாக சங்கானை, கோப்பாய், கரவெட்டி ஆகிய பகுதிகளுக்கு வழங்கப்பட்டது. 400 உலர் உணவுப் பொதிகள் யாழ்.மறைமாவட்ட பங்குத்தந்தையர்கள் ஊடாக அரியாலை, மணியந் தோட்டம், நல்லூர், நாவாந்துறை, நவாலி, பண்டத்தரிப்பு, புங்குடுதீவு ஆகிய இடங்களில் வாழும் மக்களுக்கு வழங்கப்பட்டது.

# கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் மரம் நடுகை



கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஆற்றுப்படுத்தல் மற்றும் நல்லிணக்க செயற்திட்டத்தின் கீழ் பலாலி, சாட்டி, நல்லிணக்கபுரம், வெண்புரவிநகர், நெடுந்தீவு போன்ற இடங்களில் பயன்தரும் மரங்களை சமயத் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள், சமாதான சமூக மேம்பாட்டுக் குழுவினர், இளையோர் மற்றும் கியூடெக் பணியாளர் களாலும் நடப்பட்டது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு யூலை மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.